
காந்தி மகானும் வள்ளுவரும்



திருமுருக கிருபானந்தவாரியார்

வானதி பதிப்பகம்

காந்தி மகானும் வள்ளுவரும்

திருமுருக
கிருபானந்தவாரியார்

வானதி பதிப்பகம்
13. தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

உ

முருகா

முன்னுரை

'தமிழ்' அமிழ்தினும் இனியது. இது தனித்து இயங்கும் தன்மை உடையது. மென்மையானது. நன்மை தருவது தொன்மையானது. வளமை குன்ருது இளமையாகத் திகழ்வது இத்தகைய தெய்வத் தமிழில் அமைந்தது. ''காந்திமகானும் வள்ளுவரும்'' என்ற நூல். சென்னை வானதி பதிப்பகத்தின் அதிபர் ஏ. திருநாவுக்கரசு அவர்கள் பல நூல்களை செம்மையாக அச்சிட்டு தமிழ் உலகத்திற்கு உதவி வருகிருர்கள். இவருடைய தமிழ்த்தொண்டு பாராட்டுதற்குரியது. பயன் தருவது.

இப்போது உயர்திரு. ஏ. திருநாவுக்கரசு அவர்களுக்கு மணிவிழா நடைபெறுகிறது. இந்த மணிவிழா நினைவுச் சின்னமாக ''காந்திமகானும் வள்ளுவரும்'' என்ற எனது நூலை அச்சிட்டு வழங்குகிருர்கள். இதனை அனைவரும் ஓதி உய்வு பெறுக!

அன்பன்

கிருபானந்தவாரியார்.

பதிப்புரை

உலக உத்தமர் காந்தி மகானைப் பற்றியும் வான்புகழ் வள்ளுவர் பற்றியும் வாரியார் சுவாமிகள் தமக்கே உரிய தெள்ளு தமிழ் நடையில் எழுதியுள்ளார்கள்.

காந்தியடிகளும் வள்ளுவப் பெருந்தகையும் வாழ்ந்த வாழ்க்கையை—அவர்கள் வாழ்க்கையில் ஊடாடிய உயர்ந்த இலட்சியங்களை எல்லாம் ஒன்றேடொன்று எடைபோட்டு சீர்தூக்கிப் பார்த்து வாரியார் சுவாமிகள் இந்நூலை எழுதி-யுள்ளார்கள்.


இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வள்ளுவர் எதைச் சொன்னரோ அதை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்திக் காட்டியவர் காந்தியடிகள். வள்ளுவர் வழியெதுவோ அதுதான் காந்தியடிகளின் வழியும். இருவர் செயலிலும் இருந்த சீரிய உறவு இந்நூலில் நன்கு சித்தரிக்கப்படுகிறது.

நாமும் வள்ளுவர் போல், காந்தியடிகள் போல் சீரிய வாழ்க்கை வாழ கருணை உள்ளத்தோடு வாரியார் சுவாமிகள் இந்நூலை எழுதியுள்ளார்கள்.

இந்நூலை எனது மணிவிழா வெளியீடாக வெளியிட அநுமதியளித்த வாரியார் சுவாமிகளைப் போற்றி வணங்கு-கிறேன்.

ஏ. திருநாவுக்கரசு

வானதி பதிப்பகம்



மணிவிழா தம்பதியர்

திருமதி. காளியம்மை திருநாவுக்கரசு   திரு. வானதி ஏ. திருநாவுக்கரசு

காந்தி மகானும் வள்ளுவரும்

நாம் வாழ்வது தமிழகம். தமிழகம் பற்பல சிறப்பு மிக்க இயல்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. தமிழகத்திலே உள்ள நாம் பேசுவது இனிய தமிழ்! இனிப்பான மொழி. சிறப்பான, தன்மைகொண்ட சொற்களுடைய மொழி!

பைந்தமிழ் நூலாகிய தொல்காப்பியத்திற்குப் பாயிரம் எழுதிய பனம்பாரனுர், 'வடவேங்கடம் தென் குமரி ஆயிடை.' என்று கூறுகின்ருர்.

தெற்கு எல்லை தென்குமரி: அதாவது கன்னியா குமரி. வடக்கு எல்லை திருவேங்கடம். இதற்கு இடையே யுள்ள நிலப்பரப்புத்தான் 'தமிழ் கூறும் நல்லுலகம்' ஆகும். 'தமிழ் கூறும் உலகம்' என்று சொல்லவில்லை, 'தமிழ் கூறும் நல்லுலகம்' என்று சொல்லுகின்ருர்.

தமிழ் மொழியின் இனிமையாலேயே அவ்விதம் சொல்லியிருப்பார்கள் போலிருக்கின்றது.

எங்கே தமிழ் இருக்கின்றதோ அங்கே இனிமை இருக்கும். இனிமையுள்ள தமிழைப் பேசுகின்ற மக்களிடத்திலே பண்பு இருக்கும்.

இந்தப் பண்பை நன்ருக வகுத்துச் சொன்னவர் திருவள்ளுவர். வள்ளுவர் சொன்ன அத்தனையும் வாழ்க்கையிலே காட்டியவர் மகாத்மா காந்தியடிகள்.

திருக்குறளை எழுதிய திருவள்ளுவருக்குப் பல பெருமைகள் உண்டு.

எத்தனை யெத்தனையோ தமிழ் நூல்கள் இருக்கின்றன. கம்பராமாயணம், பெரியபுராணம்,மகாபாரதம, திருவிளையாடற் புராணம், நைடதம், முதலியவைகள் போன்ற சிறப்புவாய்ந்த நூல்கள் பல இருக்கின்றன.

இருப்பினும், திருக்குறளை எழுதிய வள்ளுவருக்குத் தனிப் பெருமை என்ன?என்று சிலர் ஐயப்படக் கூடும்.

பெருமை, சுருக்கத்தில் உள்ளது. சுருக்கமாகப் பெரிய பொருள்களைச் சொல்லுவதில் வள்ளுவருக்கு நிகர் யாரும் இல்லை.

உருக்கமாகவும், சுருக்கமாகவும், தெளிவாகவும், இனிமையாகவும் பாடினார் திருவள்ளுவர்.

காந்தியடிகள் மிகவும் எளிமையாக வாழ்ந்து காட்டினார். காந்தியடிகளுடைய வாழ்க்கையிலே ஆடம்பரம் கிடையாது; அரை நிர்வாணமாக இருந்தார்! பேச்சிலே இனிமை! பார்வையிலே சாந்தம்! உடையிலே எளிமை! நடையிலே பணிவு!

நமது நாடு ஏழ்மையான நாடு! வறுமையிலே வாடும் நாடு! நமது நாட்டிலே மக்களுக்குப் போதுமான உடையில்லை! உணவு இல்லை! தங்குவதற்கு வீடில்லாத ஜனங்கள் ஏராளம்!

காந்தியடிகள் முழங்காலுக்குமேலே இடுப்புவரைக்கும்தான் உடை அணிந்திருப்பார். அவ்வளவு எளிய தோற்றம்.

'எளிமையில்தான் இருக்கின்றது பெருமை' என்று காட்டியவர் காந்தியடிகள். வள்ளுவருக்குப் பெருமை சுருக்கத்தில் உள்ளது. காந்தியடிகளுக்குப் பெருமை எளிமையில் உள்ளது.

நமது நாட்டிலே, பெரும் தனவந்தர்கள், கோடீஸ் வரர்கள், பெரிய அறிவாளிகள் என்பவர்கள் சிலர்தான் இருப்பார்கள்..

கூடிய மட்டிலும் பெரும்பான்மையாகப் பார்த்தால் ஏழைகள் நிறைந்த நாடு நமது நாடு!

இதற்கான காரணத்தை வள்ளுவர் விளக்குகின்ருர். தெளிவாக நயமாகச் சொல்லியிருக்கின்ருர். அவரைவிடச் சுருக்கமாக யாரும் சொல்லிவிட முடியாது!

அந்தக் குறள் இனிக்கின்ற தேனமுது! தித்திக்கின்ற குறள்.

> "இலர் பலர் ஆகிய காரணம் நோற்பார்
> சிலர்; பலர் நோலாதவர்."

"இலர்" என்ருல் என்ன? "இலர்" எனில் அறிவில் லாதவர்கள் என்று பொருள்படும்!

"பலர் ஆகிய காரணம்?" என்ன காரணம் என்று வள்ளுவர் கேட்கின்ருர்.

பெரும் கோடீஸ்வரர்களாக சிலர் இருக்கின்ருர்கள்.

வீடு இல்லாதவர்கள், துணி இல்லாதவர்கள் அனேகம் பேர் இருக்கின்ருர்கள்.

சிலருக்குப் பதினேந்தாம் தேதிக்கு மேலே பணம் இருக்காது; பலபேரிடம் கைமாத்து வாங்கித்தான்

குடும்பம் நடத்த வேண்டியது இருக்கும். வீட்டு வாடகை மூன்று மாதம் பாக்கியாக இருக்கும். பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடச் சம்பளம் கட்ட முடியாது; புத்தகங்கள் வாங்க முடியாது; உடையின்றிக் கஷ்டப் படுவார்கள்.,

சில குழந்தைகள் பௌண்டன் பேனாவிற்குத் துக்கப் படும். ஐயோ! பேனா இல்லையே?

'எல்லோரும் வைத்து இருக்கின்றார்களே' என்று மனம் குமுறி வேதனையிலே அழுகை வெளிப்படும்.

இன்னும் கொஞ்சம் மேல் வகுப்புப் படிக்கும் பிள்ளைகள் 'ரிஸ்ட் வாட்ச்சிலே' ஆசையாக இருக்கும். இப்படி ஏழைக் குழந்தைகளின் நிலைமை நாட்டிலே!

இதில் என்ன ஆச்சரியம் என்றால், பணக்காரர் வீட்டுப் பிள்ளைகளில் சிலர் பிறக்கும்பொழுதே "படிக்கிறதே இல்லை" என்று சத்தியம் செய்துகொண்டே நாற்காலிக்குப் பாலிஷ் செய்துகொண்டு இருக்கின்றார்கள்.

ஏழை வீட்டுப் பிள்ளைகளுக்குப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் இருக்கும். அறிவாளியாக வேண்டும் என்ற ஆசை இருக்கும். ஆனால் படிக்க நூல்கள் வாங்கப் பணம் இருக்காது. இதைத்தான் நாம் எங்கேயும் பார்க்கின்றோம்.

பணக்காரர்களுக்கு வசதிகள் இருந்தும் படிப்பு வராது! புத்தகம் வாங்கப் பணம் இல்லையே என்கின்ற ஏழைக்குப் படிப்பு வருகின்றது.

இதற்கு என்ன காரணம்? என்று வள்ளுவர் சொல்லுகின்றார்!

“இலர், பலர் ஆகிய காரணம்?” என்று கூறு கின்ருர் வள்ளுவர்.

“நோற்பார் சிலர்.”

“பலர் நோலாதவர்.”

இரண்டு வண்ணமாகச் சொல்லுகின்ருர். ஒன்று உடன்பாட்டு முகத்தாலே. மற்ருென்று எதிர்மறை முகத்தாலே!

“நோற்பார்” என்று சொன்னுல் பரம்பொருள் ஒருவன் இருக்கின்ருன். எல்லோருக்கும் ஒரு தலை உள்ள தனிப் பெரும் பொருள் இருக்கின்றது!' அவரை நினைந்து, அவரை வணங்கி, சில நோன்புகள் செய்கின்ருர்களே அவர்கள் மிகச் சிலர். பலர் நோலாதவர்: அந்தப் பரம் பொருளை நினைக்காதவர்கள் பலர்.

இலர் பலர் ஆகிய காரணம் இதுதான்! இதைத் தான் வள்ளுவர் சுருக்கமாக—

“இலர் பலர் ஆகிய காரணம் நோற்பார் சிலர் பலர் நோலாதவர்”

என்று எல்லோருக்கும் புரியு முகத்தான் தெளிவாகச் சொன்ஞர்.

இதை ஏன் உங்களுக்குச் சொல்லுகின்றேன் என்ருல், தெய்வ வழிபாடு குறைபட்ட காரணத்தால் தான் நமது நாட்டில் ஏழைமக்கள் நிறைந்து இருக்கிருர் கள். அதைப் போக்க வேண்டுமானுல் “நோற்பார்” பலராகி “நோலாதவர்” சிலராக வேண்டும்.

இதைத்தான் 2000 ஆண்டுகளுக்கு முன்பு வள்ளுவர் சொன்னார்.

அதையே நமது காந்தியடிகளும் நடைமுறையில் நல்ல காரியங்கள் செய்து நாடும் மக்களும் சுபிட்-சமடைய வழி தேடினார்.

காந்தியடிகள் எத்தனை எத்தனையோ நல்ல காரியங்களை நம் நாட்டிற்காகச் செய்தார். அதில் ஒன்று பிரார்த்தனை செய்வது. பிரார்த்தனையிலும் கூட்டுப் பிரார்த்தனை ஏன்? அவர் தனிமையில் பிரார்த்தனை செய்யவில்லையென்றால் அவர் தன்னலத்தை மட்டும் கருதவில்லை. நாட்டு மக்கள் அனைவரும் நன்றாக வாழ வேண்டும் என்பதற்காகத்தான் கூட்டுப் பிரார்த்தனை செய்தார்.

அன்று வள்ளுவன் மனம் நொந்து

"நோற்பார் சிலர்" பலர்

நோலாதவர், என்று எழுதியதை

காந்தி அடிகள் படித்து விட்டுத்தானோ? என்னவோ?

"நோற்பார் பலர்" "நோலாதவர்" சிலராகிக் கூட்டுப்பிரார்த்தனை செய்தார். ஆகவே தான் கூட்டுப்பிரார்த்தனையிலேயே அவரது ஆத்மா சாந்தி அடைந்தது.

வெறும் சாமியை மட்டும் கும்பிடுவதாக இருந்தால் நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். ஏன் என்றால் பலர் வெளி வேஷத்திற்காக ஆண்டவனை வழிபடுகின்றார்களே தவிர, உள்ளன்போடு நேசிப்பது கிடையாது!

பலர் மணியடித்து மணியடித்து "மணி"(Money) யை அடித்துக்கொண்டுவிடுகின்ருர்கள்.

இப்படிப் பட்டவர்கள் எல்லாம் கடவுளை உண்மையாகவே வணங்குபவர்கள் இல்லை; அவர்களை ஆண்டவனின் அடியார்கள் என்று கருதுவது கூடாது. உண்மையாகக் கடவுளை வணங்குகின்றவர்கள் யாரென்று சொன்னல்...?

கடவுள் கோவில்களில் மட்டும் இல்லை! ஏழைகளின் உள்ளத்திலும் இருக்கின்ருன் இறைவன்; ஏழைகள்தான் நடமாடும் கோயில்கள்!

அதனுல்தான்,ஏழை எளியவர்களுக்கு எவன் உதவி செய்கின்ருனே, அவனே உண்மையாக ஆண்டவனை வழிபடுபவனுவான்.

ஆலயத்திற்குச் சென்று ஆண்டவனை வழிபட்டு விட்டு, ஆலயத்திற்கு வெளியே நிற்கும் ஏழைகளுக்குத் தருமம் செய்யாது செல்பவன் கடவுளை வழிபட்டவனுக மாட்டான்.

பணக்காரர்களில் சிலர் கோயில்களுக்குச் சென்று ஆண்டவனுக்குச் சர்க்கரைப் பொங்கல் நைவேத்தியம் செய்துவிட்டு, அதை அப்படியே யாருக்கும் கொடுக்காமல் விட்டிற்கு எடுத்துக்கொண்டு வந்ததும், வேலைக்காரர்களையும் வெளியே அனுப்பிவிட்டு,கதவைச் சாத்திக் கொண்டு தாமே சாப்பிடுவார்கள். அதை ஜீரணிப்பதற்காக மேலே ஒரு ஜிஞ்சர் பிரையும் குடித்துவிட்டு,'சிவனே' என்று திண்ணையிலே வந்து உட்காருவார்கள்.

இவர் செய்த சர்க்கரைப்பொங்கல் நைவேத்தியத்தை 'சாமி' சாப்பிடாது என்று எண்ணித்தான் இவர்கள் எல்

லாம் நைவேத்தியம் செய்கிறார்கள் போலும்! ஒருவன் சர்க்கரைப் பொங்கல் வைத்து 'சாமி'யை வழிபடுபவனானால், தான் செய்த நிவேதனத்தை ஏழைகளுக்கெல்லாம் உருட்டிக் கொடுத்து, வேலைக்காரர்களுக்குப் கொடுத்து அதன் பிறகு, தான் சாப்பிட்டால்தான் அது உண்மையான வழிபாடு!

நேராகவே கடவுளுக்கு நிவேதனம் செய்தால், அது வீடு தேடி வருகின்ற ஏழையின் வயிற்றுக்குப் போகாது! அதே நேரத்தில் ஒரு ஏழையின் வயிற்றிலே நான்கு இட்லிகளை வாங்கிப் போட்டால், அது கடவுளுக்குப் போகும். ஏன் என்றால் ஏழைகளின் உள்ளத்திலேதான் கடவுள் இருக்கின்றார். ஏழைகளின் உள்ளம் மகிழ்ந்தால் தான் ஆண்டவனின் உள்ளமும் மகிழ்ச்சியடையும்!

அதனால்தான் கடவுளுக்கே நேராகப் போட்டால் ஏழைக்கு வராது! ஆனால் ஏழைக்குப் போட்டால் அது கடவுளுக்குப் போகும்!

உதாரணத்திற்கு இந்த ஊரிலே, ஒரு பக்கத்தில் தபால் ஆபீஸ் இருக்கின்றது. இன்னொரு பக்கத்திலே ஒரு தபால் பெட்டி இருக்கின்றது. அந்தத் தபால் ஆபீஸிலே கார்டு கவர் போட்டால் இந்தப்பெட்டிக்கு வராது. ஆனால் இந்தப் பெட்டியிலே போட்டால் அங்கே போகும்.

இந்தப் பெட்டியிலே போட்ட கார்டும் கவரும் தபாலாபீஸுக்குப் போகின்றது! அதே நேரத்தில் நேராகச் சென்று அங்கே போட்டவைகள் இங்கே வருவதில்லை! ஏன் என்றால் தபால் பெட்டி நம் வீட்டிற்கு வருகின்ற ஏழை!

இதுதான் திருமூலர் திருமந்திரத்திலும் வருகின்றது.

"படமாடக் கோயில்
பரமர்க்கு ஒன்று ஈயின்
நடமாடக் கோயில்
நம்பர்க்கு அங்கு ஆகா"

4500 ஆண்டுகளுக்கு முன்பு பாடிய பாட்டு இது! திருவள்ளுவர் 2000 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தவர். திருமூலர் 4500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்; பழங் காலத்துத் தமிழ் பழங்காலத்துத் தமிழன் சொல்லுகிறான்;

"ஏழைகளுக்கு உதவு."

கோயில்! படம் ஆடுகிற கோயில்!

ஏழைகள்! நடம் ஆடுகிற கோயில்! ஏழைகள் வீட்டுக்குத் தேடி வருகின்ற நடமாடும் கோயில்கள்.

"படமாடக் கோயில்
பரமர்க்கு ஒன்று ஈயின்
நடமாடக் கோயில்
நம்பர்க்கு அங்கு ஆகா"

என்று கூறிய திருமூலர்

"நடமாடக் கோயில்
நம்பற்கு ஒன்று ஈயின்
படமாடக் கோயில்
பரமர்க்கு அங்கு ஆமே"

என்றும் கூறியுள்ளார்.

இதைவிடத் தெளிவாக யார் சொல்லிவிட முடியும்! ஏழைகளுக்கு எப்படி உதவி செய்யலாம்?

உதவி என்றால்; பெரிதாக உதவி செய்யவேண்டு மென்று நான் சொல்லவில்லை. கடுகளவு உதவி செய்

தாலும் அது பெரிய உதவிதான். அதைத்தான் தெய்வப் புலவர் வள்ளுவரும்,

"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்" என்று கூறினார்.

இதற்கு ஒரு உதாரணம் சொல்கின்றேன்.

"நான் காரிலே ஏறிச் செல்கின்றேன். அந்தக் கார் காலியாகத்தான் இருக்கிறது. என்னைத்தவிர நான் காரில் தனியே செல்லும்பொழுது ஒரு ஏழை எதிரே நின்று கொண்டிருக்கிறான். நிற்க முடியாமல். அவனோ, பெரும் வியாதியஸ்தன். அவன் அவசரமாக ஆஸ்பத்திரிக்குச் செல்ல வேண்டும். அவனை நான் காரில் ஏற்றிக்கொண்டு போய் ஆஸ்பத்திரியில் விட்டால் என்ன?

அவனை நாம் ஏற்றாவிட்டாலும் பரவாயில்லை; அவன் மேலேயே அல்லவா ஏற்றி விட்டுச் செல்கின்றோம். மேலும் "இவனுக்கு இன்னும் சாவு வரவில்லை!" என்றல்லவா திட்டிக்கொண்டு செல்கின்றோம்.

முடிந்த மட்டும் நாம் பிறருக்கு உதவி செய்து பழக வேண்டும். எண்ணத்தினாலே, வாக்காலே, உள்ளத் தினாலே, உதவி செய்யலாம். பொருளைக் கொடுத்துத் தான் உதவி செய்ய வேண்டும் என்பதில்லை. பொருளில் லாதவர்கள் என்ன செய்யமுடியும்?

நான் எனது வீட்டிலே என் மகனுக்குத் திருமணம் செய்கிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். இதற் காகக் குறைந்தது ஒரு பத்தாயிரம் ரூபாய் செலவு செய்கிறேன்.

"இந்தத் திருமணத்திலே காருகுறிச்சி அருணாசலம் நாதஸ்வரம் ஒரு நாள்; மதுரை சோமு பாட்டுக் கச்சேரி! ஏ. கே. சி. நடராஜன் கிளாரிநட்! ஊர்வலத்திற்கு ஒரு ஐம்பது கேஸ் லைட்! சோடா கலர் ஒரு ஆயிரத்தி நூறு; விருந்தாளிகளுக்கெல்லாம் ஒரு பெரிய டின்னர்! ரொம்பவும் தடபுடலா பெரிய பந்தல்; இவைகளுக்காகத்தான் நான் பத்தாயிரம் ரூபாய் செலவு செய்திருக்கிறேன்.

இவைகளை எல்லாம் செய்த நான் முதலில் என்ன செய்திருக்க வேண்டும்?

எனது உறவினர்களில் யாராவது ஏழைகள் இருக்க மாட்டார்களா? அவர்களில் பரம ஏழையாகப் பார்த்து அதே கலியாணத்தில் ஒரு இரு நூறு முந்நூறு செலவு செய்து ஒரு ஏழைக்கலியாணம் செய்து வைக்கவேண்டும்.

தீபாவளிக்கு ஒரு ஆயிரம் ரூபாய்க்கு நான் ஜவுளி எடுக்கிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். என் மனைவிக்குப் பட்டுப்புடவை, எனக்குச் சரிகை வேட்டி முதலியவைகள் வாங்குகின்றேன், இவ்வளவையும் எனக்காக வாங்கிய நான் என்ன செய்யவேண்டும்?

எத்தனையோ ஏழைகள் துணி இல்லாமல் கஷ்டப் படுகிறார்கள். ஆடையில்லாத மனிதன் அரை மனிதன் தானே! ஆடை உள்ள முழு மனிதனுக்க நாம் முயற்சி செய்ய வேண்டாமா?

ஆயிரம் ரூபாய்க்குப்புடவை வேட்டி எடுக்கும் நான் ஐந்து ரூபாய்க்கு ஒரு அம்பாசமுத்திரம் புடவை ஒரு ஏழைப் பெண்ணுக்கு வாங்கிக் கொடுக்கலாம் அல்லவா?

எத்தனை பேர் ரோட்டில் துணி இல்லாமல் திரிகின்ருர்கள்? அவர்களுக்கு நாம் நம்மால், முடிந்த உதவியைச் செய்ய வேண்டாமா?

அவர்களும் மனிதர்கள் தானே?

என் வீட்டிலே வேலைக்காரர்கள் இருக்கிருர்கள். நான் அவர்களில் ஒருவனைப்பார்த்து,

"மணி என்ன?" என்று கேட்கிறேன்.

"மணி ஒன்னுங்க"

"அப்படின்னு நான் படுத்துக்கிறேன். மெத்தையைத் தூக்கி மேலே போடு. நீ நேரே மயிலாப்பூருக்கு வெயிலிலே நடந்தே போயி, "தெப்பம் எத்தனை" மணிக்குன்னு கேட்டுட்டுவா. திரும்பி வந்த உடனே, ஒட்டலிலே போயி பாதாம் அல்வா பாதாம்கீர் எல்லாம் வாங்கி வை!" என்று சொல்கிறேன்.

அவன் போய் திரும்பி வந்ததும், "நீ மத்தியானம் சாப்பிட்டாயா? இல்லையா?" என்று கேட்கிறேன்.

"இல்லைங்க."

"சரி, சாப்பிடலியா? பரவாயில்லை! "லங்கனம் பரம ஔஷதம்!" உடம்புக்கு நல்லது. பட்டினியாகக் கிடப்பது ரொம்பவும் நல்லது" என்று சொன்னல் ஆண்டவன் எவ்வாறு அருள் புரிவான்? எனது நலத்தைக் காக்கும் நான் அவனது நலத்தைப் பற்றியும் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? அவனும் என்னைப்போல் ஒரு மனிதன்தானே!

நான் என்ன செய்திருக்க வேண்டும்?

"அப்பா. நான் கொஞ்சம் ஓய்வெடுக்கிறேன். நீயும் கொஞ்சம் அரை மணி நேரம் ஓய்வெடுத்துக் கொள்" என்றல்லவோ சொல்லவேண்டும்.

இப்படிச் சொல்லி இருந்தால் அவனுக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்திருக்கும்? இதனால் அவன் இன்னும் எவ்வளவு உத்வேகத்துடன் வேலை செய்வான்?

அவன் மகிழ்ந்தால் எனக்கும் மகிழ்ச்சி பொங்காதா?

தமிழ் நாட்டிலே ஒரு பழமொழி உண்டு. மிகுந்த கருத்துள்ள பழமொழி!

"உண்ட களைப்பு தொண்டருக்கும் உண்டு!" தொண்டர் என்றால் யார் என்று எண்ணுகின்றீர்கள். விபூதி பூசுகின்றவனைத் தொண்டன் என்று கருதாதீர்கள். உத்திராட்சம் போட்டு இருப்பவனும் தொண்டனாக மாட்டான். பஜனை செய்பவனைத் தொண்டனாக நினைக்க முடியாது!

பின், தொண்டன் என்பவன் யார்?

தொண்டன் என்றால் வேலை செய்கின்றவன் என்று பொருள்!

உனக்கு மட்டும் களைப்பு என்பது சொந்தமல்ல. இளைப்பு என்பது உனக்கு மட்டுமல்ல! உன் வீட்டு வேலைக்காரனுக்கும் உண்டு! அவனுக்கும் ஓய்வு வேண்டும்! களைப்பு அவனுக்கும் இருக்கும்.

அவனை 'குடலறுக்க' வேலை வாங்காதே! தொடர்ச்சியாக வேலை செய்யச் சொல்லாதே! அவனையும் கொஞ்சம் ஓய்வு எடுத்துக்கொள்ளச் சொல்லுங்கள்.

என் வீட்டு வேலைக்காரன் ஒரு 'மை' பாட்டிலை உடைத்து விட்டான் என்று வைத்துக் கொள்ளுங்கள்! தவறி விட்டது. தவறுவது யாருக்கும் இயல்புதானே. அவன் செய்த காரியத்தை நான் பெரிதாக எண்ணி அவனை 'அஷ்டோத்திர' அர்ச்சனை செய்ய ஆரம்பித்து விட்டேன்.

"பாவிப்பயலே! அந்தப்பயலே! நாசமாகப்போ!" என்று. ஒரு எட்டணு பாட்டிலுக்கு எட்டாயிரம் ரூபாய் வசவு அவன் என்ன நினைப்பான்!

'பாவிப்பய என்ன திட்டு திட்டுகின்றுன்? அவன் வாயிலே புத்துவர' என்று மனதிலேயே எண்ணிக் கொள்ளுவான் அல்லவா!

அவன் பாட்டிலை உடைத்ததும் நான் என்ன செய்ய வேண்டும், என்ன கூறவேண்டும்?

அவன் பெயர் நாராயணசாமி என்று வைத்துக் கொள்ளுங்கள்.

"அப்பா! நாராயணசாமி! உடைஞ்சு போச்சா? பரவாயில்லே! யாருக்கும் தவறுவது இயல்பு. அதைப் பத்திக் கவலைப்படாதே!

போ! வேறே பாட்டில் வாங்கிக்கிறேன்,

என்று கூறி, நாம் அவனை மன்னித்து விட்டால், அவன் மனதிலே என்ன நினைப்பான்! "பாட்டிலை உடைச்சிட்டோமே! ஒரு வார்த்தைகூடக் கேட்கலையே" என்று அவனுக நினைத்து, வருத்தப்படுவான்.

எஜமான் பக்தியும் விசுவாசமும் மிகுதியாக இருக்கும் பின் நமது பொருளை அவனது பொருள்போல் எண்ணுவான்! வேலைக்காரர்களும் மனிதன்தானே! கொஞ்சம் பெரியவர்களுக்குச் சொல்லுகின்றேன்.

சாம்பாரிலே கொஞ்சம் உப்புக் குறைந்துவிட்டது! இது என்ன பாகிஸ்தான் பிரச்சனையா? சீனுப்பிரச்சனையா?

மனைவியைப் பார்த்து அன்பாக "சிவகாமி சாம்பாரிலே கொஞ்சம் உப்புக்குறைவாக இருக்கு! கொஞ்சம் பொடி பண்ணி வச்சுடு!" என்று சொல்ல வேண்டும்.

இவர் விட்டுக்கு வரும்பொழுதே நரசிம்ம அவதாரம் எடுத்துக்கொண்டு வருவார்.

"இது சாம்பாரா? உன் தலை!" என்று வசை மாரி பொழிவார்.

அவர்களும் மானம் மரியாதைகள் உள்ளவர்கள் தானே! உனது கோபத்தை யெல்லாம் அவர்களிடமா போய்க் காட்டுவது.

"சாந்த முலேகா"!

"சவுக்கியமுலேது" என்றார் தியாகப்பிரம்மம்.

இதை வள்ளுவர் என்ன சொன்னார்.

"செல்லிடத்துக்காப்பான் சினங்காப்பான்; அல்லிடத்துக் காக்கின் என்? காவாக்கால் என்?"

நம்முடைய கோபம் வேலைக்காரனிடம் செல்லும்! நம்முடைய கோபம் மனைவியிடம் செல்லும்!

அங்கே நீ சாந்தமாயிரு! நான் சொல்லுவது உங்கள் வாழ்க்கைக்குக் கொஞ்சம் வழி காட்டு முறையிலே இருக்கும்.

கொஞ்சம் சாம்பாரிலே உப்புக் குறைகிறது என்றால் சப்தம் போடாதீர்கள். தவறுவது யாருக்கும் இயல்பு தானே!

எனவே அன்பினாலே பிறரைத் திருத்த வேண்டும், ஆகவே பிறரிடத்தில் அன்பாக நடந்துகொள்ள வேண்டும். ஏழைகளைக் கண்டால் கடவுள் மாதிரி மதிக்க வேண்டும். கடவுள் ஏழை பங்காளன்.

"அருணகிரியார்" பாடுகின்றார்.

"இத மொழிபகரினும், மத மொழி பகரினும் ஏழைக்கு இரங்கும் பெருமானே!" என்று.

ஏழைகளுக்கு இறைவன் இரங்குகின்றான்.

காந்தி அடிகளுடைய வரலாற்றிலே ஒரு சிறு பகுதி...

நமது தமிழ் நாட்டிலே ஒரே காளிதான் தலை விரித்து ஆடினாள்! ஆனால் வட நாட்டிலே ஒன்பது காளிகள் தலை விரித்தாடிற்று!

ஒன்பது காளிகள் என்றால் உங்களுக்குப் புரிகிறதா? அது தான் நவகாளி என்பது!

மகாத்மாஜி எங்கே கலகம் நடந்தால் எனக்கு என்ன? என்றிருக்காமல் தளர்ந்த பருவத்திலே

வயதான காலத்திலே தடி ஊன்றிக்கொண்டு மக்களுக்கு சேவை செய்ய வேண்டுமென்று எண்ணி "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று நினைத்து புறப்பட்டாராம் நவகாளிக்கு.

மகாத்மாஜி நவகாளிக்குப் போனல் திரும்பி வர மாட்டார். அங்கு பயங்கர கலவரங்கள் நடக்கின்றன என்று எண்ணி பட்டேல்ஜி, நேருஜி, போன்ற தலைவர்களெல்லாம் தடுத்தார்கள். அணைபோன்ற வெள்ளத்தை உப்பு மூட்டையினுல் தடுக்க முடியுமா?காவேரி வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. "நான் நிறுத்துகிறேன்" என்று உப்பு மூட்டை வியாபாரி நூறு மூட்டை உப்பைப் போட்டுத் தடுத்தானும்!

உப்பு மூட்டைக்காகவா நிற்கும் காவேரி வெள்ளம்.

கோவில் யானை ஒன்று மதம் கொண்டு வருகிறது. எதிரில் ஒரு சிலந்தி வந்தது. "நான் இந்த யானையை நிறுத்துகிறேன்" என்று சொல்லி ஒரு வலை போட்டது.

சிலந்தி நூலுக்கா யானை கட்டுப்படும்.

துள்ளி ஓடுகின்ற ஒரு காளை மாட்டை ஒரு வாழை நாரில் கட்டினனும் ஒரு பிரகஸ்பதி.

அதுபோல மகாத்மாவை யாரால் கட்டுப்படுத்த முடியும்? அணை கடந்த வெள்ளமாயிற்றே அடிகள்! அவருடைய எண்ணத்தில் என்ன பிரதி பலிக்கின்றதோ, அதைத் துணிவுடன் செயலாற்றத் தயங்க மாட்டார் காந்தி அடிகள்.

மகாத்மா போனுர் நவகாளிக்கு. அங்கே எலும்புக் குவியல்களாகவும் பிணங்களாக இருந்ததாம். மக்களை அவ்வளவு அராஜகமாகவும் நடத்தி இருக்கிறுர்

கள். காந்தி அதைப் பார்த்து கண்ணீர் வடிக்கிறுர். மக்கள் என்ன பாடு பட்டார்களோ என்று வருத்தப்படுகின்றுர். அவர் உதடுகள் துடிக்கின்றன. கண்கள் கசிகின்றன. உள்ளம் உருகுகிறது.

நமது பாரத நாட்டிற்கு அனேகம் பெருமைகள் இருக்குமேயானுல் அவைகளில் தலைசிறந்த பெருமை மகாத்மாஜி தோன்றியதுதான். உலகத் தலைவர்கள் யார் இந்தியாவுக்கு வந்தாலும் காந்தி அடிகளை தகனம் செய்த ராஜ்காட்டில் மலர் மாலைகள்போட்டு வணக்கம் செலுத்துகிறுர்கள்.

அவ்வளவு பெரிய தலைவர் காந்தி அடிகள். எத்துணையோ பேர் சுடுகாட்டிற்கு செல்கிறுர்கள். அவர்களை எல்லாம் யார் போய் பார்க்கின்றுர்கள்!

வட்டிமேல் வட்டிவாங்கி பெட்டிமேல் பெட்டி சேர்க்கும் ஒருவன் செத்தால் என்ன? இருந்தால் என்ன? இரண்டும் ஒன்றுதானே. அவன் செத்தால் யார் போய் சுடுகாட்டில் பார்ப்பார்கள்!

காந்தி இறந்துவிட்டார் என்ற செய்தி கேட்டதும், பன்னிரண்டு பேர் உயிர்விட்டார்கள். அப்படிப்பட்ட பெரிய தியாகத்தின் சிகரம் மகாத்மாஜி அவர்கள்.

அவர் நவகாளியிலே தங்கியிருந்த இடத்திலிருந்து காலையில் எழுந்திருந்தார், காலைக் கடன்களை முடித்து; கடவுளைத் தியானித்தார். பின் ஆகாரம் சாப்பிட்டார். அவரது ஆகாரம் காலையிலே இதுதான். அரை எலுமிச்சம்பழம்,இரண்டு அவுன்ஸ் தேன், நாலு அவுன்ஸ் ஜலம். இதைச் சாப்பிட்டுவிட்டு வெளியே புறப்பட்டார்.

எப்பொழுதும் காலில் பாதரட்சை போட்டேதான் வெளியே செல்வார்.

காந்தியைப் படத்திலே பார்த்திருப்பீர்கள். இந்தியன் செருப்பு காலிலே போட்டிருப்பார். உயர்ந்த பாதரட்சை அணிய மாட்டார். எளிமையாக இருப்பார். பாதரட்சையிலும் எளிமை.வேண்டுமென்றே அன்றைய தினம் பாதரட்சையைக் காலில் போடாமல் வெளியே கிளம்பினர். அவருடைய பேத்தியின் பெயர் மனு காந்தி என்பது. அந்தக் குழந்தை காந்தியின் கிட்டே வந்து, "பாபுஜி! பாதரட்சையை மறந்து விட்டீர்களே!" என்று கூறியதாம்.

காந்தியின் பாதம் புஷ்பம் போல இருக்கும். அவ்வளவு மென்மையானது. அந்த மெல்லிய பாதம் வருந்த, காந்தி போவதை பார்த்துவிட்டு, கண் கலங்கக் கூறுகின்ருள்.

அதற்கு காந்தி சொன்ஞராம், "மனு! நான் தெய்வத்தை வணங்கப் போகிறேன். பாதரட்சைகள் போட்டுக் கொள்ளக் கூடாது" என்று சொன்ஞராம்.

நவகாளியிலே கோவிலே கிடையாது. இருந்தாலும் ஒன்றிரண்டு மசூதிகள் உண்டு.

அந்த விளங்காத குழந்தை மனு கேட்டது;

"பாபு! பள்ளி வாசலுக்கா செல்லுகிறீர்கள்?" என்று கேட்டதாம்.

அந்தக் குழந்தையினுடைய அறிவெங்கே! காந்தியினுடைய அறிவெங்கே!

அதற்குக் காந்தி சொல்லுகின்றார். "மனு! நான் கடவுள் என்பது கோவிலில் இருக்கின்ற கடவுளைச் சொல்லவில்லை;

கஷ்டப்படுகின்ற ஒவ்வொருவரும் கடவுள்.

துன்பத்திலே துடிக்கின்ற ஒவ்வொரு ஏழையும் கடவுள்!

அந்தக் கடவுளை வணங்கப் போகின்றேன்" என்கின்றார்!

நீங்கள் ஒவ்வொருவரும் மகாத்மா போன வழியிலே ஏழைகளுக்கு உதவி செய்யவேண்டும்.

"ஒவ்வொரு ஏழையும் ஒவ்வொரு கோயிலின் கடவுள்" என்று சொல்லும்பொழுது காந்தியின் கண்ணில் கண்ணீர் கசிந்ததாம்?

காந்திக்கு என்ன பெருமை! அவர் சொன்னதைக் காரியத்தில் செய்தார். அதுதான் தலை சிறந்த பெருமை, அவருக்கு. கக்கூஸ் அள்ளு என்றால் அவரும் அள்ளுவார். செடிக்குத் தண்ணீர் கொட்டு என்று சொன்னால், அவர் முதலில் 'மொண்டு' கொட்டுவார். காந்தியார் கஷ்டப்படுகின்ற மக்களைக் கடவுளாக எண்ணினார். சமய சஞ்சீவி அவர்!

வயிறுவெடிக்க சாப்பிட்டு விட்டுப் படுத்திருப்பவர்களைக் கடவுள் என்று அவர் கூறவில்லை; சிலர், இரண்டு இட்லி தக்காளி சட்னி; இரண்டு இட்லி வெங்காயசாம்பார், இரண்டு இட்லி மிளகாய்பொடி நல்லெண்ணெ, இரண்டு இட்லி கெட்டித் தயிர்.! மொத்தம் எட்டுத்தான்! அது போக, ஒரு ஆப்பம் தேங்காய்ப் பால்,கொஞ்சம் தேங்காய்

துருவல். இரண்டு பிஸ்கட், இரண்டு மலைப்பழம் சாப்பிட்டு விட்டு அப்படியே ஒண்ணரை கிளாஸ் காப்பியும்குடித்துவிட்டு, பெரிய ஏப்பம் விடுவார்கள். அவருக்கு ஒருத்தர் விசிறி வீசுவார்.

அவரிடம் வேலை பார்க்கும் வேலைக்காரனுக்கு 22ஆம் தேதியில் பணம் இருக்காது!பட்டினியாக இருப்பான். வயிறு பசிக்கும். அவன் ஒன்றும் கேட்க முடியாத நிலையில் தவிப்பான்!

இவ்வளவு சாப்பிடும் நீ ஆறு இட்லியை நீ சாப்பிட்டு விட்டு இரண்டு இட்லியை அவனுக்குக் கொடுத்தால் என்ன?

இவ்வளவையும் சாப்பிட்டவன் வேலைக்காரனைக் கேட்பான்.

“நீ ஒண்ணும் சாப்பிடலையாடா?”

“ராத்திரியே ஒண்ணும் சாப்பிடலிங்க!”

“லங்கணம் பரம ஔஷதம். நோயே உனக்கு வராதுடா. நல்லா விசிறு!”

என்று கூறுபவன் எவ்வாறு ஆண்டவனை வழிபட்டவனாவான். நான் ஒரு தத்துவம் சொல்லப் போகிறேன். மூச்சின் காற்று குளிர்ச்சியாக இருக்குமா? சூடாக இருக்குமா?

மூச்சுவிடும் பொழுதே நெருப்பாக பறக்கின்றது. பசித் தீ கொழுந்துவிட்டு எரிகிறது. அது எப்படி இருக்கும்?

சூடான காற்ருக இருக்குமல்லவா. கொல்லன்; இரும்புத் தச்சன் பட்டறையில் துருத்தி என்ற ஒரு கருவி இருக்கும். அது தோலினுல் ஆனது. அவன் அந்த துருத்தியை அமுக்கும்பொழுது வெளிவருகின்ற சூடான காற்று இரும்பைச் சாம்பலாக்குகிறது.

அதுபோல், பசித் தீ அவனை வாட்டும் பொழுது விடுகின்ற மூச்சானது உனது சொத்துக்களை எல்லாம் சாம்பலாக்கி விடும்.

உனது வேலைக்காரனுக்கு ஆயிரம், இரண்டாயிரம் என்று ரூபாயை கொடுக்கச் சொல்லவில்லை. அவன் பசிக்கு ஒரு பழையதைப் போடு.

இந்தக் காலத்தில் சிலபேர் பழையதையும் விடுவதில்லை. அதை வடகமாகப்போட்டு ''பழையது வற்றல்'' என்று சாப்பிட்டு விடுகிருர்கள்.

இன்னும் சில பேருக்கு சட்டை வயிற்றுப் பாகத்தில்தான் கிழியும். கிழிந்த சட்டையைத் தைத்து ஏழைகளுக்குக் கொடுக்க மாட்டார்கள். அதையும் எவர்சில்வர் வாங்க உபயோகித்து விடுகிருர்கள். சட்டையைத் தைத்து ஒரு ஏழைக்கு கொடுத்தால் என்ன?

அருணகிரியார் பாடுகிருர்.

மலையாறு கூறெழ, வேல் வாங்கி
னானை வணங்கி, அன்பின்
நிலையான மாதவஞ் செய்கு மினேதம்
நும்மை தேடி வரும்
தொலையா வழிக்குப் பொதி சோறும்
உற்ற துணையும் கண்டீர்
இலையாயினும் வெந்தது ஏதாகினும்
பகிர்ந்து ஏற்றவர்க்கே.

நம்முடைய பாரத நாட்டில் எத்தனையோ ஏழைகள். எச்சிலையை எடுத்துச் சாப்பிடும் ஏழைகள் போல் நமது நாட்டைத் தவிர ஐந்து கண்டத்திலும் கிடையாது.

நான் மலேயாவிற்கு மூன்றுமுறை போயிருக்கிறேன். காலை ஆகாரத்திற்குச் சுமார் பன்னிரண்டு இட்லிகள் எனக்கு வாங்கிக்கொண்டு வருவார்கள். அந்த ஊரிலே என்பால் பிரியம் கொண்டுள்ள அன்பர்கள்.

நான் இரண்டு இட்லிதான் சாப்பிடுவேன். மீதியுள்ள இட்லியை யாருக்கும் கொடுத்தால் வாங்க மாட்டார்கள். அதைக் குப்பைத் தொட்டியிலே போட்டால், பன்றிகூடத் தின்னாது.

மறு நாள் பார்த்தால் அந்த இட்லிகள் அப்படியே அந்தக் குப்பைத் தொட்டியிலேயே கிடக்கும்.

நமது நாட்டிலேதான் எச்சில்களை அள்ளிச் சாப்பிடுகின்றார்கள்.

மலேயாவிலே தைபிங்க் என்ற ஒரு ஊர் உண்டு. அங்கு சேக்கிழார் குருபூஜைக்கு நான் சென்றேன். முப்பது படி நெய் ஒழுக, சர்க்கரைப் பொங்கல் போட்டார்கள்.

அன்று தினம் அங்கு வந்தவர்கள் யாரும் அதை வாங்க மாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள். அதை வாங்கினால் கை கழுவ தண்ணீர் கிடைக்காது என்ற காரணத்தினால் வேண்டாமென்று கூறினார்கள். பணத்திலே மிதக்கின்ற நாடு அது. செல்வம் கொழிக்கின்ற பூமி அது. சர்க்கரைப் பொங்கல் அப்படியே மிஞ்சிவிட்டது.

நமது நாட்டிலே பணக்காரர்கள் ஒரு கையில் வாங்கிக்கொண்டு மறுகையை பின்பக்கமாக நீட்டுவார்கள். அவ்வளவு ஆசை அதன்மீது. அதிலேயும் அந்தப் பொங்கலை விநியோகிக்கும் புண்ணியவான் செல்வந்தர்களாகப் பார்த்து உருட்டி உருட்டி, கொடுத்துவிட்டு ஏழைக் குழந்தைகளுக்கு வெறும் கையைத் தடவுவான்.

ஏழைகள் வெளியே வந்து பூதக் கண்ணாடி போட்டுத்தான் பார்க்க வேண்டும்.

"என்னடா! ஒண்ணும் காணோமே!" என்று எண்ணுவான். இந்த அநியாயம் உண்டா!

நியாயமாக யாருக்குத் தரவேண்டும், ஏழைகளுக்கு அல்லவா தர வேண்டும்.

பணக்காரர்களுக்குக் கொடுக்காவிட்டால் என்ன கெட்டுவிடும்.

நம் நாடு கொஞ்சம் வறுமையுள்ள நாடுதான். எத்துணையோ மானமுள்ள தமிழ் மக்கள் தம் வறுமையை வெளியிலே சொல்லிக்கொள்ள மாட்டார்கள்- பசியால் செத்து மடிவார்கள். மானமே பெரிதென்று எண்ணுவார்கள்.

குறிப்பறிந்து கொடுக்கவேண்டும் வறியவர்களுக்கு.

நான் ஒரு சின்னக் கதை சொல்லுகிறேன். கதையென்றால் எல்லோருக்கும் பிரியமல்லவா?

நான் கதை சொல்லும் நோக்கம் கொஞ்சம் கஷ்டப் படுகின்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதுதான்.

ஒரு ஊரில் ஒரு கிழவி இருந்தாள். அந்தக் கிழவி, கனமான நகைகளாக போட்டுக் கொண்டு இருந்தாள்.

அந்தக் காலத்தில் நகைகள் யாவும் தொங்கும் நகைகளாக இருக்கும். பாம்பு வடம், தாம்புக்கயிறு சங்கிலி முதலியவைகள் அணிந்திருந்தாள். நல்ல கனமான, நகைகள். அந்தக் கிழவிக்குச் சுமார் எண்பத்தைந்து வயதிருக்கும்.

அவள் தனது வீட்டின் ரேழியில் நெல் குத்திக் கொண்டிருந்தாள்.

அந்தக் காலத்தில் மிஷின் கிடையாதல்லவா!

இப்பொழுது எதை அறைக்க வேண்டுமானாலும் மிஷின்கள் இருக்கின்றன.

விழுங்குவதற்கு மட்டும்தான் மிஷின் இல்லை.

அதற்கு மட்டும் மிஷின் வந்துவிட்டால் மிகவும் சௌகரியம்.

அவன்பாடு செக்கில் கையெழுத்து போட, மிஷின் பாடு விழுங்கிக்கொண்டே இருக்கும்.

அவ்வளவு நாகரிகம் அக்காலத்தில் கிடையாது. கையிலேதான் நெல்லைக் குத்த வேண்டும்.

அந்தக் கிழவி அரிசி குத்திக்கொண்டு இருக்கிறாள். ஒரு சாமியார் விபூதி தரித்து, உத்திராட்சங்கள் போட்டு, சிவப் பழமாக வருகின்றார். அவர் மிகவும் ஏழை.

"அம்பலத் தரசே! அரு மருந்தே!
ஆனந்தத்தேனே! அரும் விருந்தே!
முந்து தமிழ்மாலை கோடிக் கோடி
சந்தமொடு நீடு பாடிப் பாடி
முஞ்சர் மனைவாசல் தேடித் தேடி
உழுதாரே."

என்று பாடிக் கொண்டே வருகின்றார்.

கிழவி கோபமாக அவரைப் பார்த்து,

"ஓய்!பட்டையும்,கொட்டையும் ஆளைப்பாரு,ஆளை! சோம்பேறி! பனைமரத்தில் பாதி இருக்கிறாய் போய்யா! சோறும் கிடையாது ஒண்ணும் கிடையாது!"

என்று கடிக்கின்றதுபோல் கோபித்துப் பேசுகின்றாள்.

அதற்கு!

சாமியார் சொல்லுகிறார்; "பாட்டி! ஏதாவது யாசிக்கலாம் என்று வந்தேன். இவ்வளவு வெகுண்டு சொல்லுகின்றீர்களே" என்று மன வருத்தமாகக் கூறினார்.

அதற்கு அவள்,

"என்ன பாட்டின்னு கூப்பிடுகிறாய்; பச்சை வெட்டு மருந்து சாப்பிட்டு பல் விழுந்து போச்சு.

தேன்பட்டு நரச்சுப்போச்சு. வயது எண்பத்தைந்து தான் ஆச்சு. இதற்குள்ளே பாட்டியா!"

"பெரியம்மா! இவ்வளவு நகை போட்டிருக்கிறியே பெரியம்ம!"

"நகை போட்டா என்னய்யா ...போறியா இல்லையா? நாயைவிட்டு விரட்டட்டுமா?"

"அது வேறயா இருக்கு பெரியம்மா."

"அதுகிட்டே இருந்து நீ கத்துக்கிட்டியா? உங்கிட்டேயிருந்து அது கத்துக்கிட்டுதா பெரியம்மா!"

"போய்யா வெளியே!"

"அந்தப் பிராணி மாதிரி இருக்குதம்மா குரல் பெரியம்மா! பட்டினத்தாரு ஒரு பாட்டு பாடியிருக்கிறாரம்மா.

"பிறக்கும்பொழுது கொடு வந்ததில்லை
பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொடு போவதில்லை
இடை நடுவில்
குறிக்கும் இச்செல்வம்
சிவன் தந்தது என்று
கொடுக்க
அறியாது இறக்கும் உலகோருக்கு
என் சொல்வேன்
கச்சி ஏகம்பனே!"

"பிறக்கும் பொழுது கொடு வந்ததில்லை!" இவ்வளவு நகைகள் போட்டுக் கொண்டு இருக்கிறாயே அம்மா!

வயிற்றிலே இருந்து பிறக்கும்போதே ஏதாவது இங்கு கொண்டு வந்தாயா?

"பிறந்து மண்மேல் இறக்கும் பொழுது
கொடு போவதில்லை"

சுடுகாடு போகும்போது ஏதாவது கொண்டு போகப் போகிறாயா? ஒரு நாளைக்கு பிரயாணம் இருக்கிறதே.

"குறிக்கும் இச்செல்வம்
சிவன் தந்தது என்று
கொடுக்க அறியாது
இறக்கம் குலாமருக்கு
என் சொல்வேன்
கச்சி ஏகம்பனே!"

"நடுவிலே வந்தது எல்லாம் பகவான் தந்தது தானே. நான் பணமாக கேட்கவில்லை பாட்டி. ஒரு பிடி அரிசி கொடு என்றுதான் கேட்கிறேன்." என்று கூறினார் சாமியார்.

"பாவிப்பயலே! சுடுகாட்டுக் கதையா பேசுகிறாய்?"

ஹும்! எனக்கென்ன சாகிற வயதாச்சு என்று உலக்கையினாலே சாமியாரை இடிக்கப் போனாள் தாடகை மாதிரி அந்தக் கிழவி. உலக்கையைத் தூக்கியவுடன் சாமியார் எடுத்தார் ஓட்டம்.

அந்தக் கிழவி இடிக்கப்போன உலக்கையில் ஒட்டியிருந்த ஒரு அரிசி சாமியாரின் சட்டியில் விழுந்தது.

கிழவி அதைப் பார்த்திருந்தால் சாமியாரின் சட்டியிலுள்ள அரிசி எல்லாம் என்னுடையது என்று சொல்லியிருப்பாள். சாமியார ஓட்டமாக ஓடிவிட்டார்.

வேறு எங்கோ பிச்சை எடுத்து சுந்தரேசுவரர் கோவிலுக்குச் சென்று மடப்பள்ளியில் சமைத்து ஆண்டவனுக்கு நெய்வேதனம் செய்து பின் தான் சாப்பிட்டு விட்டு நிஷ்டையில் உட்கார்ந்தார். பெரிய மகான் இவர்.

இறப்பு என்பது எல்லோர்க்கும் வருகின்ற ஒன்று தானே.

ஏதோ இந்த உலகத்திலே நிரந்தரமாக வாழப் போகிறோம் என்று எண்ணி பெரிய பெரிய மனக் கோட்டைகள் எல்லாம் கட்டுகிறார்கள்.

மனக்கோட்டைகள் எல்லாம் தகர்ந்து ஆண்டவன் கூப்பிட்ட நேரத்தில் போய்த்தானே சேரவேண்டும்.

காலா காலத்தில் கிழவியும் கண்ணை மூடிவிட்டாள். எமதூதர்கள் வந்து அவளைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனார்கள்.

நாம் பேசுவதை ரிக்கார்டு செய்வதுபோல, மனிதர் கள் செய்கின்ற செயல்களை எமன் ரிக்கார்டு செய்கின்றான்.

இங்கிருந்து அங்கு போனால் சினிமாப்படத்தில் ரில் எடுத்துப் போடுவது போல் நாம் செய்தவற்றை எல் லாம் ரில் எடுத்துப் போடுவான். எமன் கோபமாக.

"கொண்டா கிழவியை! எடுடா கணக்கை!"

அங்கு சித்திர புத்திரன் என்பவன் இருக்கிறான். நாம் செய்யும் நல்லது கெட்டது முதலிய விபரங்களைச் சேகரிக்கும் கணக்கன் அவன்.

அவன் கணக்கைக் கொண்டு வந்து எமனிடம் கொடுக்க, எமன் கிழவியைப் பார்த்து,

"ஏய் கிழவி! நீ என்ன வியாபாரம் செய்தாய்!"

"பால்வியாபாரம் பண்ணினேனுங்க" "பாலில் தண் ணீர் விட்டாயா"! "பாலில் தண்ணீர் விட்டால் கட்டாது என்று எண்ணி தண்ணீரில் பாலை விட்டேனுங்க. தண் ணியை விட்டா பால் கெட்டாபோவுதுங்க" என்று கிராஸ்

கேள்வி வேறு கேட்டுவைத்தாள். எமனுக்கு கோபம் வந்து அதிகப் பிரசங்கித்தனமாக பேசாதே, நான் கேட்கின்ற கேள்விகளுக்கு மட்டும் பதில் சொல்.

"கன்றுக்குப் பால் கொடுத்தாயா?"

"கன்றுக்குட்டியே இல்லே, வைக்கோலே அடைச்சு காட்டி தான் பால் கறந்தேனுங்க. கன்றுக்குட்டி இருந்தா தானுங்களே பால் கொடுக்கமுடியும்!"

"எறும்புகளுக்கு நொய் போட்டாயா?"

"நெருப்பை அள்ளித்தானுங்க போட்டேன்!"

"சிறு வயசிலே ஏதாவது தர்மம் பண்ணினுயா?"

"கண்ணு தெரியாதவங்க வந்தா காலணு போடுவேனுங்க!"

"போட்டியா?"

"காலணு போட்டுவிட்டு நாலணு எடுத்துக் கொள்வேனுங்க!"

"கோவில்லே உண்டியலுக்கு ஏதாவது போட்டியா."

"அங்கே போயி யாராவது பாதரட்சைகளை விட்டிருந்தால் எடுத்துக்கிட்டு வந்திடுவேனுங்க!"

"உனக்கு எவ்வளவு சொத்து?"

"ஒன்பது லட்சம்!"

"எப்படி சொத்தெல்லாம்!"

"புரு கூண்டாட்டம் வீட்டை கட்டி வாடகைக்கு விட்டு காத்துவராமே வாடகைக்கு விட்டு மாசா மாசம் வாடகையை உசத்தி வாடகைக்காரனை சாகடித்து....!"

"கொஞ்சம் முன்னுடிப் பின்னுடி இடம் விட்டு கார்ப் பொரேஷன் கட்டச் சொல்லியிருப்பாங்களே" "அதற்குப் பணம் கொடுத்து சரிக்கட்டிட்டேனுங்க!"

"பின்னே வேறே என்ன பண்ணினே?"

"தெருவிலே கதை கிதை நடந்ததே போனியா?"

"இல்லே வேலையில்லாத ஆளுன்னு கிண்டல் பண்ணினேனுங்க!"

"வேறே என்னதான் பண்ணினே நீ?"

"அமாவாசை, கிருத்திகை தவிர மற்றநாளெல்லாம் எல்லாத்தையும் உள்ளே தள்ளினேனுங்க!"

"அப்போ நீ வேறே எந்தப் புண்ணியமும் பண்ண லேயா?"

"இல்லிங்க!"

அதற்கு சித்ரபுத்திரன்

மேற்படி சாமியார் வரலாற்றை கூறுகிருன்.

"தான் சிறிதே ஆயினும் தக்கார்கைப் பட்டக்கால் வான் சிறிதாப் போர்த்துவிடும்." என்று நாலடியாரில் இருக்கிறது. எல்லோரும் நாலடியாரும், திருக்குறளும் படிக்கவேண்டும் என்று ஒரு பழமொழி தெரியுமா?

"ஆலும் வேலும் பல்லுக்குறுதி"

"நாலும் ரெண்டும் சொல்லுக்குறுதி"

"பாலும் தேனும் உடலுக்குறுதி"

"வேலும் மயிலும் உயிருக்குறுதி"

"நாலு என்றால் நாலடியார்" "இரண்டு என்றால் திருக்குறள்" "வேலும் மயிலும் என்று சொன்னால் ஆத்மா சுத்தியடைகிறது."

நான் சொல்லும் வேல் என்பது ஆண்டவன் கையிலிருக்கும் வேலல்ல. அது ஆயுதம். வேல் என்பது ஞானம்.

"வெல், வெல் என்ற சொல்லின் முதல் எழுத்தின் முதல் நிலை நீண்ட தொழிற் பெயர் வேலென்பது"

"எல்லாவற்றையும் வெல்வது வேல்"

"வேலும், மயிலும் உயிருக்குறுதி"

இது ஒரு நல்ல விளக்கம். அந்தச் சாமியாரின் வயிற்றில் ஒரு அரிசி விழுந்து விட்டது. அது நல்ல சற்பாத்திரம் ஆனதாலே கைலாச மலைக்குப் போய் சிவபெருமானைக் கும்பிடுகின்ற அளவிற்குப் புண்ணியம் வந்து விட்டது.

எமன் சொல்கிறான்.

"சரி தூதர்களே, இந்த கிழவியைக் குண்டுக் கட்டாகக் கட்டி கைலாச மலைக்குக் கொண்டு போய்

கொடி மரத்திற்கு வெளியே நிறுத்தி ஆண்டவனைக் காட்டி பிறகு கூட்டி வாருங்கள். அதன்பின் அரணைக் குழி, கொதிக்கின்ற எண்ணையிலே போட்டு வைத்து அப்பளப் பூ எடுப்பது போல் எடுக்க வேணடும்.

தேங்காய் மூடியிலே எறும்பு வந்தால் நெருப்பிலே கொண்டு கொட்டி விடுபவள், கொசு மேலே விழுந்தால் கொன்று விடுவாள். கறுப்பாகச் செல்லும் பிள்ளையார் எறும்புக்குக் கடிக்கத் தெரியாது; கடிக்கத் தெரியாத எறும்பைக் கூட நசுக்கி விடுவாள். எறும்பைக் கொல்லு வது பெரிய வீரமா? கொசுவை அடித்துக்கொல்லுவது பயில்வான் செயலா? இந்தக்கிழவி ரொம்பப் பாவத்தைப் பண்ணியவள். தகுந்த தண்டனை கொடுக்கவேண்டும்.

ஆகவே, "கொண்டுபோய் சாமியைக் காட்டிவிட்டு, கொண்டு வாருங்கள்" என்று எமன் கட்டளையிடுகிறான். தூதர்கள் கிழவியை அழைத்துச் செல்லுகின்றனர்.

கைலாச மலை ...வெள்ளி மலை தளதளவென் றுள்ளது.

கண்ணைப்பறிக்கும் ஜுவாலைகள் தென்படுகின்றன அழகின் சிகரமாகக் தென்படுகின்றது. பவள மலை போன்ற சுவாமி. மரகதக் கொடி போல அம்பாள் நடுவிலே சொர்ணக்குன்று போல சுப்ரமணிய சுவாமி சோமாஸ்கந்தர்.

கிழவியைக் கொடி மரத்திற்கு வெளியே நிறுத்தி "ஏய்! பொல்லாத கிழவி, அதோ பார், ஈஸ்வரன்?"

ஆயிரம் கோடி சந்திர பிரகாசமாய் ஆண்டவன் அருள் ஒழுக இருக்கிறான்.

ஆண்டவனைப் பார்த்து கிழவி கண்ணிர் உகுக்கிருள்.

கிழவி மனத்திற்குள் அவளாகச் சொல்லிக் கொள் கிருள்.

"ஐயா! ஏழைகளுக்குச் சோறுபோட்டால் இவ்வளவு புண்ணியம்" என்று எனக்குத் தெரியாது.

"ஒரு அரிசிக்கே இவ்வளவு புண்ணியம் என்ருல், மூட்டை மூட்டையாக அரிசி வைத்திருந்தேனே! குதிர் குதிராக நெல்லு வைத்திருந்தேனே! நோட்டு நோட்டாக வைத்திருந்தேனே! வெள்ளி வெள்ளியாக வைத்திருந் தேனே! இவ்வளவு புண்ணியம் கிடைக்குமென்று தெரியாமல் போய்விட்டேனே!

"இவ்வளவு புண்ணியம் என்று தெரிந்திருந்தால் தினம் மூன்று சாமியார்களுக்கு இலை போட்டு விருந்து செய்திருப்பேனே! ஒருத்தரும் விவரமாக சொல்ல வில்லையே."

"ஐயா! தூதர்களே! உங்களைத் தலையாலே வணங்கி கும்பிடுகிறேன். கையை அவிழ்த்துவிடுங்கள் ஐயா!"

"ஆண்டவனை இரண்டு கையாலும் கும்பிடவேண்டா மா? தலைக்கு மேலே கையைத் தூக்கிக் கும்பிடவேண்டும் தயவு செய்து அவிழ்த்துவிடுங்கள். ஐயா" என்று மன்ரு டினுள்.

அழுதால் யாருக்கும் இரக்கம் பிறக்கும் தானே. அதுவும், ஆண்டவனைக் கும்பிட வேண்டும் என்று சொல்லுகிருள். கையை அவிழ்த்து விடுவோம் என்று எண்ணி, எம தூதர்கள் கிழவியின் கையை அவிழ்த்து விட்டார்கள்.

கையை அவிழ்த்து விட்டதும் கிழவி ஒரே பாய்ச்சலில் சென்று இறைவனை தனது இரு கைகளாலும் கட்டிப் பிடித்துக் கொண்டு கோவென்று கதறுகிருள்.

“சாமி ! தேவாதி தேவா! கருணைக் கடலே! மகா தேவா!

“அம்மையே அப்பா; ஒப்பிலா மணியே!
அன்பினில் விளைந்த ஆரமுதே!
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே! சிவபெருமானே!
இம்மையே! உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவது இனியே!

தெரியாமல் குற்றம் செய்து விட்டேன். என்னை மன்னித்து ரட்சிக்க வேண்டும். யார் யாருக்கோ கருணை புரியும் நீ என்பால் கருணை காட்ட மாட்டாயா?” என்று கிழவி ஆண்டவனிடம் முறையிடுகிருள்.

என்ன இருந்தாலும் அவளும் கடவுளின் குழந்தை தானே!

உங்கள் வீட்டுக் குழந்தை காப்பி குடிக்கும்பொழுது கீழே சிந்தி விட்டது என்று வைத்துக் கொள்வோம். ஒரு டம்ளர் காப்பிதான் சிந்தியது; பெருங் குற்றமாகாது.

காப்பி சிந்தியவுடன் குழந்தையின் தாய் தனது குழந்தையின் முதுகிலே, "இனிமேல் தவறு செய்யாதே" என்று இரண்டு தட்டுத் தட்டுவாள்.

அவள் அடிக்காவிட்டால், தனது மூத்த பையனை அடிக்கச் சொல்லுவாள். அதுவும் இல்லாவிட்டால், அவளது கணவனையாவது அல்லது தன் தம்பியையாவது அடிக்கச் சொல்லுவாள்.

ஒன்று, தான் அடிப்பாள்; அல்லது தனது உறவினரை அடிக்கச் சொல்லுவாள்.

குழந்தை காப்பியை கொட்டிவிட்டதே என்று எண்ணி தெருவில் சென்றுகொண்டிருக்கும் இடியப்ப நாயக்கர் பரம்பரை தாரா சிங் பயில்வானை கூப்பிட்டு "ஏ! தாராசிங்! இந்தப் பயல் காப்பியைக் கொட்டி விட்டான். இவனுக்கு இரண்டு முதுகிலே போடு" என்று எந்தத் தாயாவது சொல்லுவாளா? அந்தமாதிரி தாய், ஐந்து கண்டத்திலும் உண்டா?

அதுபோல சிவபெருமானே! நான் தப்பு செய்தேன். உலகில் அக்கிரமம் செய்தேன். எல்லோரையும் ஏமாற்றினேன். நீ எனக்கு தண்டனை கொடு.

அல்லது எனது அம்மாவாகிய பார்வதிதேவி தண்டிக்கட்டும்.

அதுவும் இல்லையென்றால் அண்ணு போல உள்ள விநாயகப் பெருமான் தண்டிக்கட்டும்.

அல்லது எனது தாய் மாமா நாராயண மூர்த்தி தண்டிக்கட்டும். ஆனால், இந்தப் பயில்வான் எமன் கிட்டே மட்டும் என்னை காட்டிக் கொடுத்துவிடாதே என்று கிழவி சொன்னாள்.

கருணாமூர்த்தியாகிய சுவாமி கூறுகிறார். "கிழவி! பயப்படாதே!"

"நீ சொல்லுவது நியாயம்! பயில்வானை விட்டு யாரும் குழந்தையை அடிக்கச் சொல்ல மாட்டார்கள்."

"நீ இப்படி வந்து உட்காரு" என்று சிவபெருமான் சொல்ல, கிழவி ஆண்டவனின் பக்கத்தில் வந்து உட்காரு கிறாள். ஆண்டவனின் பக்கத்திலே கிழவி உட்காரு வதைப் பார்த்து எம தூதர்கள் விழிக்கிறார்கள். கிழவி கம்மென்று பேசாமல் உட்கார்ந்துவிட்டாள்.

தூதர்கள் கிழவியைப் பார்த்து, "கிழவி! வா வெளியே" என்று கூப்பிட்டார்கள்.

கிழவி அவர்களைப் பார்த்து "ஏ! எமதூதர்களே! வரமாட்டேன்! நீங்கள் போங்கள்." என்கின்றாள்.

"வா வெளியே" என்று கர்ஜிக்கிறார்கள் தூதர்கள்.

ஆண்டவன் அருகினில் இருக்கிறான் என்ற தைரியத்தில் தூதர்களைப் பார்த்துக் கிழவி,

"போடா வருவதில்லை" என்கிறாள்.

"சிவபெருமானே! கிழவியை வெளியே பிடித்து அனுப்புங்கள்" என்கின்றார்கள் தூதர்கள்.

அதற்கு சிவபெருமான் "தூதர்களே! காகமானது கோடி கூடி நின்றாலும் ஒரு கல்லுக்கு எதிர் நிற்குமோ? கோடி காக்கைகள் கூட்டமாக நின்றாலும் ஒரு கல்லைப் போட்டால் அத்துணையும் பறந்து போகும்."

"கிழவி ஜன்ம ஜன்மங்களில் செய்த பாவங்களெல்லாம் என்னைத் தீண்டியவுடனேயே பஸ்மீகரமாக எரிந்து விட்டது."

"கிழவிக்கு நான் அடைக்கலம் கொடுத்து விட்டேன், போங்கள்" என்றார். அதற்கு தூதர்கள், "சுவாமி! எங்கள் எஜமானன், எமன் கேட்டால் நாங்கள் என்ன சொல்லுவது?"

அதற்கு சிவபெருமான், "தூதர்களே! நீங்கள் போய் உங்கள் எஜமானன் எமனிடம் மார்க்கண்டேயர் கதையை ஞாபகப்படுத்தி பார்க்கச் சொல்," என்கிறார்.

தூதர்களும், "தங்களது உத்தரவு" என்று சொல்லிப் போகிறார்கள்.

தூதர்கள் எமனிடம் வந்தவுடன்
"எஜமானே! வணக்கம்."
"என்னடா பிணக்கம்!"
"எங்கேயடா கிழவி!"

அதற்கு தூதர்கள், "விஷயம் கொஞ்சம் தவறிப் போய் விட்டது."

"என்ன!"

ஆண்டவனைக் கிழவி தரிசித்தாள். "இரண்டு கையாலும் கும்பிட வேண்டும். தயவுசெய்து கையை அவிழ்த்து விடுங்கள் என்று அழுதாள், கதறினாள்.

"நாங்களும் இரக்கப்பட்டு அவிழ்த்துவிட்டோம்."

"கையை அவிழ்த்துவிட்டவுடன் நாங்கள் எதிர் பாராமல் நிற்கும்பொழுது திடீரென்று உள்ளே ஓடிப் போய் சாமியை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, அழுதாள், முறையிட்டாள்; ஆண்டவன் இரக்கப்பட்டு அந்தக் கிழவியை மன்னித்து அனுக்கிரகம் செய்து விட்டார்" என்றார்கள் தூதர்கள்.

எமன் கோபமாக "உள்ளே போய் கிழவியை இழுப் பதுதானே!"

அதற்குத் தூதர்கள், "நாங்கள் ஆண்டவனிடம் கிழவியை அழைத்துப்போகக் கேட்டோம்."

"அவர் தங்களுக்கு மார்க்கண்டேயர் கதையை ஞாபகப்படுத்தச் சொல்லிச் சொன்னார்."

எமனுக்கு இடிவிழுந்தாற்போல இருந்தது.

"இந்தக் கிழவிக்கு ஏன் அத்தனைப் பாவங்களும் மன்னிக்கப்பட்டு அனுக்கிரகம் கிடைத்தது!

அந்த ஏழைச் சாமியார் வயிற்றிலே விழுந்த அந்த ஒரு அரிசியினால்தான்!" என்று எமன் தனக்குள்ளே சொல்லிக் கொண்டான்.

ஆகவேதான், கஷ்டப்படுகின்றவனுக்கு, துன்பப் படுகின்றவனுக்கு, இன்னல் அடைபவனுக்கு நாம் உதவி செய்தால், நன்மை செய்தால், தெய்வம் நமக்கு உதவி செய்யும், அனுக்கிரகம் புரியும்.

ஆகவே மகாத்மாஜி அவர்கள் கஷ்டப்படுகின்ற ஏழைகளுக்கும், துன்பப்படுகின்ற அரிஜனங்களுக்கும், இன்னல் படுகின்ற மக்களுக்கும், உதவி செய்தார். பணி புரிந்தார். ஆதரவு காட்டினர்.

காந்தி இல்லையானல் தீண்டாமை ஒழிந்து இருக்குமா?

அரிஜனங்களுக்கு நன்மை கிடைத்து இருக்குமா?

ஆலயப் பிரவேசம் என்பது எவ்வளவு பெரிய மகத்தான சாதனை.

ஏழை எளியவர்கள் இந்த உலகிலே வாழத் தகுதி உள்ளவர்கள்தான். அவர்கள் மக்களில் தனிப் பிரிவினர்கள் அல்லர்.

யாவரும் சம அந்தஸ்துஉடையவர்கள். பணத்தால் உயர்ந்தவனக இருக்கலாம்.

மனிதர் என்ற முறையிலே இரு சாரும், ஒரு கோட்டிற்குள் அடங்கியவர்கள்.

ஆகவே வள்ளுவனர் சொன்னர்.

"வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து."

"ஏழைகளுக்கு உதவி செய்வதுதான் உண்மையான கொடை; மற்ற எல்லாத் தர்மங்களும் பயனை எதிர்பார்த்துக் கொடுக்கும் தன்மையது" என்கின்றார், வள்ளுவர்.

திவான் பகதூருக்கும், ராவ் பகதூருக்கும் விருந்து வைப்பதில் பயன் என்ன இருக்கிறது?

டாடாவிற்கு, பிர்லா விருந்து வைத்தால் யாருக்கு என்ன பயன்?

பரம ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டும்.

அதைத் திருவள்ளுவ நாயனார் சொன்னார். மகாத்மா காந்தி அடிகள் அவர்கள் நடத்திக் காட்டினார்கள்.

இருப்பினும், காந்திக்கும், திருவள்ளுவருக்கும் நடுவிலே ஒரு பெரியவர் வாழ்ந்திருந்தார். மிகப்பெரியவர்; தமிழ்க் கடல் என்று சொன்னாலும் பொருந்தும். அவர் பெயரை சொல்லாமல் இருக்க முடியாது.

அவர்தான் இராமலிங்க அடிகளார்! வள்ளலார்! அருட்பிரகாச ஜோதி!

அந்த வள்ளலார் சொன்னார்; "ஜாதி மதபேதங்களெல்லாம் இருக்கக் கூடாது. சமரசமாய் மக்கள் இருக்க வேண்டும்."

"தாழ்ந்த ஜாதி, உயர்ந்த ஜாதி" என்ற நோக்கம் இருக்கலாகாது.

"எல்லோரும் அன்பாக வாழவேண்டும்" என்றார்.

அதை அத்தனையும் நடைமுறையிலே காட்டியவர்கள் மகாத்மா காந்தி அடிகள். ஜாதி ஜாதி என்று சொல்லுகின்றார்களே! ஜாதி என்பது எப்படி வந்தது என்பது தெரியுமா?

நான் தத்துவ ரீதியாகச் சொல்லுகிறேன்.

தணிந்த சிந்தை உடையவர் அந்தணர்.
பொய் புலன்களை வென்றவன் அரசன்.
புண்ணிய பாவங்களை வளர்க்கின்றவன் வைசியன்.
பிறருக்கு உதவுகின்றவன் வேளாளன்.
கோபம் வருகின்றவன் சண்டாளன்.

இவைதான் ஜாதிகள் என்பன.

நான் ரயிலில் ஒரு ஊருக்குச் சென்று கொண்டிருக்கிறேன். நான் உட்கார்ந்து இருக்கும் வண்டி காலியாக இருக்கிறது.

ஆகவே நான் ஜமுக்காளத்தைப் போட்டுப் படுத்துக்கொண்டு பிரயாணம் செய்கிறேன்.

ஒருவர் நடுவிலே நான் இருக்கும் வண்டியிலே ஏறுகிறார். வந்தவரை உட்காரச் சொல்ல வேண்டுமென்பதற்காகப் படுத்திருந்த நான் எழுந்து உட்கார்ந்துகொண்டு, படுக்கையைச் சுற்றிவிட்டு அவர் உட்காருவதற்கு இடம் கொடுக்கிறேன். அவரிடம் பிரியமாக பேச ஆரம்பித்து எனது பழக் கூடைகளிலிருந்து பழங்களில் இரண்டை எடுத்து அவரிடம் கொடுத்து "சாப்பிடுங்கள்" என்கிறேன்.

அவரிடம் "திருச்சி போகிறீர்களா?" என்கிறேன். அவரும் ஆமாம் என்கிறார். ரொம்ப சந்தோஷம் என்று

கூறிவிட்டு எனது பிளாஸ்கில் இருந்த காப்பியை அவருக்கு ஒரு கப் கொடுத்துச் சாப்பிடச் சொல்லுகிறேன்.

ஆகவே, நான் தணிந்த சிந்தையோடு அவரை உபசரிக்கிறேன் அல்லவா! அந்த நேரத்தில் நான் அந்தணன் ஆகிறேன்.

அவருடன் ஒரு இளம் பெண் இருக்கிறுள் என்று வைத்துக் கொள்ளுவோம்.

அவளை நான் எனது சகோதரியைப் போல, தாயைப்போல, தங்கையைப் போல பார்ப்பேனுனல் அப்பொழுது அரசன் ஆகிறேன்.

அந்த நேரத்தில், பொறி புலன்களை அடக்கி ஆள் கிறேன் அல்லவா!

நான் ஒருவருக்கு வெற்றிலையைக் கொடுத்துவிட்டு பதிலுக்குப் புகையிலையை வாங்குவது வைசியனின் செயலாகும்.

ஒன்றைக் கொடுத்து ஒன்றை வாங்குகிறேன் அல்லவா?

ஒரு கிழவி மரத்தடியில் உட்கார்ந்து இருக்கிறுள். அவளுக்கு ஒரு கப் காப்பி வேண்டும்.

நான் அந்த வழியேவருகின்றேன். என்னைப்பார்த்து எனக்கு ஒரு கப் காப்பி வேண்டும் என்று கேட்டு என்னிடம் காசைச் கொடுத்து வாங்கித்தரச் சொல்லுகிறுள்.

நான் காப்பியை அந்தக் கிழவிக்கு வாங்கிக் கொடுத்து உதவி செய்கிறேன்.

அந்த நேரத்தில் உதவி செய்கின்ற காரணத்திஞல் நான் வேளாளன் ஆகிறேன்.

நான் பிறரிடத்திலே கோபமாக இருக்கின்றபொழுது சண்டாளன் ஆகிறேன்.

உதவி செய்வது என்பது மிக்க நன்மையானசெயல்.

உதவி செய்வதைப் போனற உண்மையான அன்பு இந்த உலகில் கிடையாது.

ஒரு மனிதன் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஜாதியிலே இருக்கிருன்.

முதலியார் என்றும், செட்டியார் என்றும், தனித் தனி ஜாதி கிடையாது. அவ்வாறு சொல்வதெல்லாம் பித்தலாட்டம்.

நன்கு சிந்தனை செய்து பாருங்கள்.

மந்திரியின் பிள்ளை மந்திரியா? மந்திரி என்ற ஒரு ஜாதி இருக்கிறதா? இல்லையே. மக்களுக்குத் தொண்டு செய்து அவர்களின் அன்புக்குப் பாத்திரமாகி, பணி செய்தால் மந்திரியாகலாம்! நீங்களும் ஆகலாம், நானும் ஆகலாம். மந்திரி பிள்ளைதான் மந்திரியாக வேண்டும் என்ற ஒரு சட்டமும் கிடையாது. ஜாதியும் கிடையாது.

சிலபேர் பதவியைப் பிடித்துத் தொங்குவார்கள். தொங்குவது மிகவும் கேவலமான செயல்.

பதவியைப் பிடித்துத் தொங்காமல் இருந்தால் தான் பதவி உங்களை மதிக்கும்.

நான் ஒரு பிரசங்கி; நான் பிரசங்கியாக இருக்கின்ற காரணத்தினால் என் மகனும் பிரசங்கி ஆகிவிடமுடியுமா?

முடியாதே!

படித்தால்தானே பிரசங்கி ஆக முடியும். அந்தணர் ஜாதி,வேளாளர் ஜாதி, வைசிய ஜாதி, சண்டாளர் ஜாதி, அரசன் ஜாதி என்ற ஐந்து பிரிவுகள்தான் ஜாதியில் உள்ளன. இது ஒரு பெரிய தத்துவம்.

மக்கள் எல்லோரும் ஜாதி மனப்பான்மை இல்லாமல் பிறருக்குக் கருணை காட்ட வேண்டும்.

கருணைகாட்டி உதவி புரிந்தால்தான் நமக்குக் கடவுள் கருணை காட்டுவார்.

மகாத்மாஜி எல்லோரிடமும் கருணை காட்டினார்கள். கடவுளின் அனுக்கிரகம் அவருக்கு என்றும் வேண்டும் என்கின்ற நினைப்பும் உண்டு.

கடவுளின் அனுக்கிரகம் வேண்டாமென்று சில பைத்தியங்கள் சொல்லிக்கொண்டு திரிகின்றன.

கடவுளைப் போன்ற காந்தி அடிகளே கடவுளிடம் மிகுதியான பக்திகொண்டு தெய்வத்தை நம்பி வாழ்வை நடத்தினார்கள்.

மகாத்மாஜி அவர்கள் பெரிய தியாக புருஷர். நாடு விடுதலையடைய வேண்டுமென்று அவர்பட்ட துயரங்கள் அளவிட முடியாதவை.

தனது வாழ்வில் மூன்றில் ஒரு பகுதியைச் சிறை யிலே கழித்தார். இருபத்தியொரு நாட்கள் உண்ணா-விரதம் தொடர்ச்சியாக இருந்தார்.

காலையிலே காப்பி சாப்பிடவில்லையென்றால் சில பேர்களுக்கு மயக்கம் வந்துவிடுகிறது என்கிறார்கள். ஏகாதசி விரதம், கிருத்திகை விரதம் வரும்பொழுது நானும் விரதம் இருக்கின்றேன் என்று சொல்லி, பலகாரத்தைப் பலபேர் சாப்பிடுவதை நாம் பார்க்கின்றோம்.

அமாவாசைக்குக் கூட காப்பி சாப்பிட்டுவிட்டுத் தான் தர்ப்பணம் செய்கிறார்கள் பலபேர்.

ஒரு வேளை சாப்பிடாமல் இருக்க முடிவதில்லை. நாட்டிற்காக,இந்திய மக்களின் நன்மைக்காக,மகாத்மாஜி அவர்கள் இருபத்து ஒரு நாட்கள் தொடர்ச்சியாக உண்ணாவிரதம் இருந்தார். அவருடைய தியாகத்தை என்னவென்று சொல்வது! எப்படிப் போற்றுவது?

> **"அன்பிலார் எல்லாந் தமக்குரிய ரன்புடையா**
> **ரென்று முரியர் பிறர்க்கு"**

என்று திருவள்ளுவ நாயனார் குறளின் மூலம் எடுத்துச் சொல்லியுள்ளார்.

அன்பு உடையவர்கள் தங்கள் எலும்பினாலும் கூட உதவி செய்யத் தயங்க மாட்டார்கள்.

காந்தியடிகளுக்கு இந்தக்குறளின் கருத்து எவ்வளவு பொருந்தும். காந்தியடிகள் உடல், உள்ளம், உணர்ச்சி போன்ற சகல விதமானவற்றையும் இந்த நாட்டின் கண் உள்ள மக்களின் அன்பால் தியாகம் செய்தார்.

**"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்,"**

என்று, வள்ளுவனார் கூறியபடியே புலால் உண்ணுதலை மறுத்தவரும் பிற பிராணிகளைக் கொல்லுதல் பாவமெனப் போதித்தவருமான காந்தி மகானை நம் நாட்டிலும் வெளி நாட்டிலும் எல்லோரும் தெய்வமாக மதித்துப் போற்றுகின்றனர்.

நம் காந்தி மகான் எல்லோருக்கும் நல்லவராக வாழ்ந்தார்.

**"உள்ளத்தால் பொய்யா தொழுகி னுலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் முளன்."**

என்று பொய்யா மொழிப் புலவர் கூறியபடியே பொய் பேசுவதைத் தடுத்தார் காந்தி மகான்.

ஆகவே, எல்லோர் இதயத்திலும் உள்ளத்திலும் நீங்காத இடம் பெற்றார்.

நான் ஒரு நாள் ஒரு நண்பரைப்பார்க்க உட்லண்ட்ஸ் ஹோட்டலுக்குச் சென்றிருந்தேன். அவரை நான் பார்த்தவுடன் என்னை மிகுந்த உபசரிப்புச் செய்தார். நான் பார்க்கச் சென்ற நண்பரையே பார்க்க இரண்டு முஸ்லிம் நண்பர்களும் வந்திருந்தார்கள். அந்த முஸ்ஸிம் நண்பர்கள் பெரிய கோடீஸ்வரர்கள். எங்கள் மூவருக்கும் கிரஷ் கொண்டுவரச் செய்தார், நான் காணச் சென்ற நண்பர். அந்த முஸ்லிம் நண்பர்கள் கிரஷை வேண்டாமென்று மறுத்து விட்டார்கள். நான் அவர்களைப் பார்த்து, "என்னையா! வேண்டாமென்று சொல்லி விட்டீர்களே?" என்று கேட்டேன்.

அதற்கு அவர்கள், "சுவாமி! இன்றைய தினம் ரம்ஜான் பண்டிகை. இன்று தினம் விரதம். ஆகையால் இப்பொழுது சாப்பிடக் கூடாது. நோன்பு முடிந்த பின்பு தான் சாப்பிட வேண்டும்" என்று சொன்னார்கள்.

முஸ்லிம்களின் கோட்பாடுகள் மிகவும் சாலச் சிறந்தவையாய் இருக்கின்றன. அவர்களுக்கு ஐந்து கோட்பாடுகள் உள்ளன. கடவுள் நம்பிக்கை மதவளர்ச்சிக்காகப் பாடுபடுதல் வருடத்திற்கு முப்பது நாள் இரவு உணவு, பகல் உணவு இல்லாதிருத்தல்; தினம் ஐந்து முறை கடவுளை வணங்குதல்; ஆயுசுக்கு ஒரு முறை மெக்காவுக்குப் போய் வருதல். நமக்கு யாராவது இன்னொருவர் ஓட்டலில் பலகாரம் வாங்கிக் கொடுத்தால் வயிறே வேறாக மாறிவிடுகிறது. நாம் இவ்வாறெல்லாம் இருக்க மாட்டோம். ஏனெனில் காந்தியின் அடிச்சுவட்டில் வாழ்பவர்கள் அல்லவா?

காந்தியின் எண்ணம் தானே நமக்கு இருக்கும்? காந்தியின் உள்ளம்தானே நம்மைப் பிரதிபலிக்கும்?

ஒன்பதினாயிரம் மல்லில் ஒரு சின்னப் பீஸ் கிழித்தாலும் அதனுடைய தன்மை குறையாது அல்லவா? காந்தியடிகள் வழியிலேயே நாமும் செல்லவேண்டும்.

சிலபேர் சில வீட்டில் கணவன் கோபித்துக்கொண்டு ஆபிஸுக்கு சென்றுவிட்டால், போனால் போகிறார் என்று இருக்கிறார்கள் சில மனைவிமார்கள். ஏனென்றால் சாப்பாடு மிச்சமாக இருக்குமே என்றுதான்!

அவ்வாறு இருத்தல் தமிழர் பண்பு ஆகுமா? ஆகாதே!

காந்தியினிடத்தில் நினைக்க முடியாத உயர்ந்த குணங்கள் இருந்தன. "மகான்" என்று சொல்லுவதிலே தான் நமக்குப் பெருமை. மகானுக்கெல்லாம் மகானுகத் திகழ்ந்தவர் மகாத்மா. இருபத்தியொரு நாட்கள் அதாவது மூன்று வாரம் பட்டினி கிடந்து உண்ணு விரதம் இருந்தார்.

இந்த விரதம் தனக்காக அல்ல. மற்றவர்களுக்காக வள்ளுவர் சொன்னுர்.

யார் பெரியவர் என்ருல்?
"உண்ணுது நோற்பார் பெரியார்"
யார் பெரியார்?

பட்டினி கிடந்து எவன் நோன்பு இருக்கிருனே அவன் பெரியவன். கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் இருக்கிருர்கள். நீங்கள் என்னை நம்ப வேண்டாம். திருவள்ளுவரை நம்புங்கள். ஆழ்வாராதிகளை நம்புங்கள். என்னை நம்பவேண்டாம். பெரியவர்களை நம்பவேண்டும். சில நம்பிக்கை இல்லாத பெரியவாள் பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும்போது, தூங்கிக் கொண்டு பிரயாணம் செய்கின்ருர் என்று வைத்துக் கொள்ளு வோம்; உனது உயிரை நீ டிரைவரிடம் நம்பித்தானே ஒப்படைத்துத் தூங்குகிருய்? டிரைவரும் மனிதன் தானே? அவனுக்கும் தூக்கம் என்பது கிடையாதா? வண்டி ஓடிக்கொண்டிருக்கும்போது இளந்தென்றல் காற்று விசும். காற்றின் சுகம் கண்ணைமூட டிரைவர் தூங்கிவிட்டானேயானுல் உனது நிலை என்ன ஆகும்?

உனது உயிரை டிரைவரிடம் ஒப்படைத்த நம் பிக்கையால்தானே தூங்குகின்ருய்?

ஆகவே, நம்பிக்கை வேண்டும். உனக்கு ஒரு வியாதி வருகின்றது என்று வைத்துக்கொள்வோம். டாக்டரிடம் சென்று கையைக் காட்டுகின்ருய். அவர் உன்னேச் சோதித்து மருந்து எழுதிக் கொடுக்கின்ருர். அவர் எழுதும் மருந்து யாருக்காவது புரிகிறதா? அவர் எழுதிய எழுத்தை நம்பித்தானே மருந்தை வாங்கிச் சாப்பிடு கிருய்? வைத்தியர் மறந்த நினைப்பில், வேறு மருந்து எழுதிக் கொடுத்துவிட்டால் உனது நிலே என்ன?

ஆகவே, அவரை நம்பித்தானே மருந்தைச் சாப்பிடு கிரேம். டிரைவரை நம்பும் நாம், டாக்டரை நம்பும் நாம் ஏன் பெரியவர்கள் சொல்லியதை நம்பக்கூடாது?

"நம்பியே கைதொழுதேன் நான்."

தேசம் விடுதலேயாகவேண்டும். நாடு அடிமைத் தளையிலிருந்து விடுபட வேண்டும் என்று எண்ணியவர் காந்தியடிகள். சும்மாவா? சுதந்திரம் கிடைத்தது. எத்துணே விரர் பலியாயினர். எத்துணேத் 'தியாக' சீலர்கள் பணிபுரிந்தனர். எத்துணேப் பெரியார்கள் சிறை சென்றனர். பெரிய மகான்கள் செய்த தியாகத்தினுலே இந்த நாடு சுதந்திரம் அடைந்தது.

தியாகம் மிகப் பெரியது. அதனுடைய தன்மை மிக உயர்ந்தது.

கொஞ்ச நேரம் கீழே உட்கார்ந்தால், எழுந்திருக்கும் போது அய்யோ கால் பிடித்துக் கொண்டுவிட்டதே என்று சொல்லும் "நம்பிக்கை இல்லாதவர்கள்" இருக் கின்ருர்கள். நமக்குத் தியாகம் செய்யவேண்டும் என்கிற எண்ணம் வேண்டும். உயர்ந்த நோக்கம் வேண்டும்.

நாகங்களுக்கெல்லாம் ராஜா "நாக ராஜா"
கஜங்களுக்கெல்லாம் ராஜா "கஜ ராஜா"
தியாகிகளுக்கெல்லாம் ராஜா "தியாக ராஜா"
அந்தத் தியாகராஜா எங்கே இருக்கின்றார்?

காவேரி வெள்ளம் பெருக்கெடுத்துப் பசுமையான தோற்றத்தைத் தரும். திருவையாற்றிலே வீற்றிருக்கின்றார்.

நாம் எல்லோரும் விரும்பாத இடத்திலே அந்த ஆண்டவன் காட்சியளிக்கின்றான். மக்களாகிய நாம் விரும்பாத இடம் சுடுகாடு ஒன்றுதான்.

எல்லாக் கட்சிக்காரர்களும் சண்டைக்காரர்களும் ஒத்துப் போகின்ற இடமும் சுடுகாடுதான். அந்த இடத்திலே ஆண்டவன் குடியிருக்கிறார். வாழ்விலே வெறுத்தவர்கள்கூட சுடுகாட்டில் குடியிருக்க மாட்டார்கள். ஆண்டவனின் தியாகம் மிகப் பெரிதல்லவா.

அவர் அணியும் ஆபரணங்கள்தான் என்ன? எல்லாம் தங்கத்தில் ஆனவையா?வைரத்தினால் செய்யப்பட்டதா?

அவர் அணிவது புலித்தோல்; தலையிலே பாம்பு; நெற்றியிலே சாம்பல்; மார்பிலே தும்பைப் பூ; சாப்பிடுவதோ விஷம்.

நமக்கு ஆண்டவன் உலகத்திலே நன்மைகள் யாவும் செய்துவிட்டு அவர் துறவறமாய் காட்சி தந்து தியாக மூர்த்தியாய் இருக்கின்றார்.

என்னிடத்தில் தியாக புத்தி இல்லையென்றால் ஆண்டவனை ஏமாற்றுகின்றேன் என்றுதான் பொருள்

தியாகம், சேவை இவைகள் நாட்டிற்கு இன்றியமையாதவையாகும்.

எப்பொழுதும் நான் சொல்லுவது திருவள்ளுவர் பல பெருமைகள் பொருந்தியவர். அவர் இயற்றிய நூல் உலகத்திற்கே பெருமை வாங்கித் தந்திருக்கிறது.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து,
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

என்று பாடியிருக்கிறார் சுப்பிரமணிய பாரதியார்.

மக்களுக்கு இரண்டு கண்கள் இருக்கின்றன என்றால் ஒரு கண் காந்தியடிகள், மற்றொரு கண் திருவள்ளுவர் ஆகும்.

இரண்டு பெரியார்களில், திருவள்ளுவர் எதைச் சொன்னாரோ அதைக் காந்தியடிகள் செய்து காட்டினார்கள், கூடுமானவரையில்!

சமநோக்கு வேண்டும்.
சமதர்மம் மலரவேண்டும்.
ஏழைக்கு உதவ வேண்டும்
ஜாதிமத பாகுபாடு கிடையாது.

என்ற தத்துவங்களை மக்கள் நினைத்து காரியங்களை நடத்தினால் அதுவே நாம் திருவள்ளுவ நாயனாருக்கும், காந்தியடிகளுக்கும் செய்த தொண்டாகும்.

கடல்நீர் உள்ளளவும், வானம் இருக்குமட்டும் காந்தியடிகளுடைய பெயரும், திருவள்ளுவ நாயனாரின் பெயரும் ஓங்கிப் பிரகாசிக்கும்.

அவர்களுடைய வழியை நாமும் பின்பற்றுவோம் நாடும் பின்பற்றட்டும்.

தெய்வப் புலவர் திருவள்ளுவர்

திருவள்ளுவர் என்பவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் அவதரித்தவர்.

வெப்பம் அதிகமான பொழுது, வானத்தில் மேகந் தோன்றி மழை பொழிவது இயல்பு. அதுபோல் அநீதியான வெப்பம் மிகுதியானபோது, ஞானமாகிய வானத்தில் அருளாகிய மேகந்தோன்றி, நீதியாகிய மழை 1330 முறை பொழிந்தது.

அந்த நீதி நீர், பள்ளம், மேடு முதலிய எல்லா இடங்களிலும் இன்னும் தேங்கி நிற்கிறது. அறவுலகம், பொருளுலகம், இன்ப உலகம் என்ற மூன்று உலகங்களும் செழித்தன. அம் மேகந்தான் திருவள்ளுவர். அம் மழை நீர்தான் திருக்குறள்.

திருவள்ளுவர் பரந்த நோக்கம் உள்ளவர்; எம் மதத்தையும் சாராது, பொது நிலையில் நின்று, ஏனோரும், வானோரும் ஒப்புக் கொள்ளுகின்ற முறையில் திருக்குறளைப் பாடி உதவியருளினர்; யார் மனமும் நோவாது அறங்களை இடித்துக்கூறும் இயல்புடையவர்.

மனிதர்களில் மூன்று பிரிவுகள் உண்டு. மனிதரில் விலங்கு; மனிதரில் மனிதர்; மனிதரில் தேவர். ஆசை உள்ளம் படைத்தவன் விலங்கு; அன்பு உள்ளம் படைத்தவன் மனிதன்; அருள் உள்ளம் படைத்தவன் தேவன்.

தேவன் என்ற சொல்லுக்கு ஒளியுடையவன் என்பது பொருள். திவ்ய என்ற பகுதியடியாகத் தேவன் என்ற சொல் பிறந்தது.

தனக்கென்று வாழ்கின்றவன் விலங்கு.

பாதி தனக்காகவும், பாதி பிறருக்காகவும் வாழ்கின்றவன் மனிதன்.

பிறருக்கென்றே வாழ்கின்றவன் தேவன்.

ஆசை வாழ்க்கை இருள் சூழ்ந்தது
அன்பு வாழ்க்கை இன்ப மயமானது
அருள் வாழ்க்கை ஒளி மயமானது

திருவள்ளுவர் மனிதரில் தேவர். அதனுல் அவரைத் திருவள்ளுவ தேவர் எனப் பெரியவர்கள் கூறுவார்கள்.

மற்றும் தெய்வப்புலமை என்று திருவள்ளுவரையும், சேக்கிழாரையுமே குறிப்பிடுவது ஆன்ருேர் மரபு.

ஞானத்தின் திருவுருவாகிய தட்சிணுமூர்த்தி, சனகாதி முனிவர்கள் நால்வர்க்குச் சகல வேத ஆகம புராணங்களின் முடிவாகிய உட்பொருளைத் தமது திருக்கரத்தால் சின்முத்திரையாகக் காட்டி உபதேசித்தருளினுர்.

நிறைந்த அறிவுள்ளவர்கள் குறிப்பாலும், சுருங்கிய சொற்களாலும் விளக்கி விடுவார்கள். பல்லாயிரம் சொற்களால் சொல்ல வேண்டியதைப் பேரறிஞர்கள் சில சொற்களால் அழகாகவும், அருமையாகவும் சொல்லுவார்கள்.

திருமால் குறளாகி (குள்ள வடிவினராகி) இரண்டு அடியால் மூன்று உலகங்களையும் அளந்தார். திருவள்ளுவர் ஒன்றே முக்கால் அடியால் பதினாறு உலகங்களையும் அளந்துவிட்டார்.

முதலாவதாக அவர் "கடவுள்" வாழ்த்து என்று கூறினார்.

"கடவுள்" என்ற சொல் 'செலுத்துவது' என்ற பொருள் பயக்கும். கடவுதல்—செலுத்துதல், செய்வது செய்யுள் என வந்ததுபோல் உலகங்களையும் உயிர்களையும் செலுத்துவது கடவுள். உயிர்க்குயிராய் நின்ற பொருள் கடவுள்.

ஒரு வண்டியைச் செலுத்துகின்றவன் அந்த வண்டிக்குள்ளேயே இருந்து செலுத்துவதுபோல், கடவுள் உடம்புக்குள், உயிருக்குள் நின்று இவற்றைச் செலுத்துகின்றான். எள்ளுக்குள் எண்ணெயைப்போல், உயிருக்கு உயிராய் இறைவன் இருக்கின்றான்.

> "உரைசேரும் எண்பத்துநான்கு நூறாயிரமாம் யோனி பேதம்
> நிரைசேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய் ஆங்காங்கே நின்றான்"

என்கிறார் திருஞானசம்பந்தர்.

ஆகவே, திருவள்ளுவர் இறைவனைக் கடவுள் என்ற சொல்லாலேயே உணர்த்தினார்.

கடவுளை ஏன் நாம் வாழ்த்த வேண்டும் என்ற ஒரு வினா எழும். நாம் வாழ்த்தியா கடவுள் வாழப் போகின்றார்? எப்போதும் அழிவற்ற பொருளாக, இன்ப

வடிவினராக எல்லாம் செய்ய வல்லவராக முடிவில்லாத ஆற்றலுடையவராக இருப்பவர் கடவுள். அப்படியிருக்க அவரை வாழ்த்துவது எற்றுக்கு?

ஒரு நூலில் ஆயிரம் மணிகளைக் கோர்த்து வைத்திருக்கின்றன். ஆயிரம் மணிகளையும் அசைக்க வேண்டுமானால் ஒவ்வொரு மணியாகப்பிடித்து அசைப்பது அறிவுடைமையாகாது. ஆயிரம் மணிகளுக்குள்ளும் ஊடுருவி நிற்கும் நூலைப் பிடித்து அசைத்தால் ஆயிரம் மணிகளும் தாமே அசையும். அதுபோல் எல்லா உயிர்களுக்குள்ளும் உயிருக்குயிராய் ஊடுருவி நிற்கும் இறைவனை வாழ்த்தினால் எல்லா உயிர்களும் வாழும்.

இந்த அரிய கருத்தை ஒட்டியே திருவள்ளுவர்,

> "மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
> நிலமிசை நீடு வாழ்வார்"

என்று கூறினார்.

ஆன்மாக்களின் இதய தாமரையாகிய தகராகாச புண்டரிகத்தில் விளங்குகின்ற எம்பெருமானை வாழ்த்தி வணங்கி வழிபடுவார் என்றும் இன்புற்று நீடுவாழ்வார்.

எல்லாவுயிர்களும் ஈசன் கோயில்கள்; ஆதலின் அவ்வுயிர்கள் அனைத்தையும் ஓம்புதல் வேண்டும். இதுவே ஆன்றோர்கள் தொகுத்த அறங்கள் அனைத்திலும் தலையாயது என்று கூறுகின்றார்.

> "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
> தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

உயிர்களிடத்தில் அளவு கடந்த கருணை வைத்தாலன்றி, கடவுள் கருணையைப் பெறமுடியாது என்பது

வள்ளுவரின் முடிந்த முடிவான கருத்து. அவர் கூறும் போது அந்தக் கருத்தைச் சிறிதுகூட மயங்க வைக்காது தெளிவாகத் தெரிவிப்பார்.

"ஒன்ருக நல்லது கொல்லாமை; மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று."

இவ்வாறு திருவள்ளுவர் அநேக அறங்களை அழகாகவும், ஆழமாகவும், தெளிவாகவும், இனிமையாகவும் கூறியுள்ளார்.

இது அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாலையும் 133 அதிகாரங்களையும், 1330 பாடல்களையும் கொண்டது. திருக்குறள் சிந்தைக்கு இனியது. செவிக்கு இனியது. வந்த வினைக்கு மருந்தாக இருந்து உதவுவது.

சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல் என்ற அழகுகளையுடையது திருக்குறள். மிக விரிந்த கருத்துக்களை மிகச் சுருங்கிய சில சொற்களால் கூறும் திறமுடையது திருக்குறள். "ஒரு முறைக்குப் பத்து முறைகூறு" என்று ஆன்ருேர்கள் கூறுவார்கள். திருக்குறளும் ஒவ்வொரு பொருளைப் பற்றிப் பத்துப் பத்துப் பாடல்களாகக் கூறுகின்றது. கோயில்களில் பெருவிழாவும் கொடியேற்றி பத்து நாட்கள் கொண்டாடுகின்ருர்கள். திருமாலும் உலகம் உய்யுமாறு பத்து முறை அவதாரஞ் செய்தார்.

இனி தமிழ் எழுத்துக்களில் முதல் எழுத்து 'அ'; இறுதி எழுத்து 'ன்'. திருக்குறளில் முதற் குறள் அகரத்திலேயே தொடங்குகின்றது.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

இறுதிக் குறள் 'ன்' என்ற எழுத்தில் முடிவு பெறுகின்றது.

> "ஊடுதல் காமத்திற்கின்பம்; அதற்கின்பம்
> கூடி முயங்கப் பெறின்"

இதனால் தமிழ் எழுத்துக்களில் முதல் எழுத்தில் தொடங்கி, முடிவு எழுத்தில் முடிகின்ற நூல் இந்த நூல் ஒன்றுதான்.

இது தன்னிலையில் அணுத்துணையும் சிதையாததும், பாடபேதம் இல்லாததும் ஆகிய நூல். இது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழகம் செய்த தவப் பயனாய் எழுந்த அரிய நூல். இதில் அடங்காத நீதி ஒன்றுமில்லை.

கணவனும் மனைவியுங் கூடி வாழ்வது எதன் பொருட்டு? என்ற வினவை எழுப்பிக் கொண்டு, அந்த வினவுக்கு அருமையாக விடை கூறுகின்றது திருக்குறள்.

நாயகனும் நாயகியும் வீட்டில் இருந்து செல்வத்தை ஓம்பி வாழ்கின்ற காரணம் விருந்தினரை ஓம்பி உதவி செய்யும் பொருட்டே என்று கூறுகின்றது திருக்குறள்.

> "இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
> வேளாண்மை செய்தற்பொருட்டு."

விருந்தோம்புவதே மேலான கடமை.

> "விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
> மருந்தெனினும் வேண்டற் பாற்றன்று."

இனி, அரிய திருக்குறள் ஒன்றைச் சிந்திப்போம்.

**"செல் விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு."**

பரிமேலழகர் இதற்கு "தன்கட்" சென்ற விருந்தைப் பேணிப் பின் செல்லக் கடவ விருந்தைப் பார்த்து தான் அதனோடு உண்ணவிருப்பான்" என்று உரை எழுதியிருக்கின்றார்.

செல்விருந்து என்றதற்கு "தன்னை நாடிச் சென்ற விருந்து" என அது பொருள் தருகின்றது.

இதனினும் மேலான பொருள் ஒன்றை இங்கு கூறுகின்றேன்; நமது நாட்டில் இருந்த சில ஞானிகள் ஆகார விஷயத்தில் அஜகரம் என்ற விருத்தியை மேற்கொண்டார்கள். அஜகர விருத்தி என்றால் மலைப்பாம்பு போன்று உண்பது என்று பொருள். மலைப்பாம்பு உணவை நாடி எங்குஞ் செல்வதில்லை. அது இருக்கும் இடத்திற்கு யதேச்சையாக ஒரு பிராணி வருமானால் அதனைப் பிடித்து அருந்தும்.

அதுபோல அந்த ஞானிகள் எங்கும் உணவை நாடிச் செல்லமாட்டார்கள். அவர்கள் தன்னிச்சைபோல் சென்று கொண்டிருப்பார்கள்; அவர்களைத் தேடிக் கொண்டுபோய் உணவு தரவேண்டும். இந்த வகையில் சேர்ந்தவர் பட்டினத்து சுவாமிகள்.

**"இருக்குமிடந்தேடி என்பசிக்கே யன்னம்
உருக்கமுடன் கொண்டுவந்தால் உண்பேன்-பெருக்க
அழைத்தாலும் போகேன் அரனே என்தேகம்
இளைத்தாலும் போகேன் இனி."**

என்று கூறுவதிலிருந்து அவர் அஜகர விருத்தியை மேற் கொண்டவர் என்பது தெளிவாகின்றது.

என்வே, செல்விருந்து என்றால் வீடுதேடி வராது தன் விருப்பம்போல் செல்லுகின்ற சிவஞானிகளைத் தேடி உணவு தந்து ஓம்புதல் வேண்டும் என்று பொருள் கொள்ளவேண்டும்.

இவ்வாறு, செல்விருந்து ஓம்பியும், வருவிருந்தை எதிர்பார்த்து ஆதரித்தும் உதவுகின்ற தரும குணசீலனை தேவர்கள் தமக்கு நல்விருந்து என எதிர் பார்த்து உபசரித்துச் சிறப்பு செய்வார்கள் என்று பொதுமறை கூறுகிறது.

இவ்விதம் அரியபெரிய கருத்துக்களை விளக்கி நமக்கு நலஞ் செய்கின்ற அமுதத் தமிழ் திருக்குறள்.

இதனைப் படிக்கக் கூடாது. படிப்பது என்பது அழகும், அருமையும் இன்றிப் படிப்பது ஆகும்.

ஓதுவது என்பது காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவதாகும்.

எனவே திருக்குறளை ஓதுதல் வேண்டும். திருக்குறள் உண்மை மொழியாகும்.

> "திருவள்ளுவதேவர் வாய்மை என்கின்ற
> பழமொழியை ஓதியே உணர்ந்து"

என்கின்றார் அருணகிரிநாதர்.

ஆகவே, வானோரும் போற்றும் திருக்குறளை ஏனோரும் ஓதி உணர்ந்து நலத்தைப் பெற்று உய்வார்களாக.

''காந்தியும் - சாந்தியும்''

அணிகலன்கள் மனிதரை அழகு படுத்துகின்றது. ஆனால், அணிகலன்களில் உயர்ந்த அணிகலன்களை யுணர்த்துகின்றேன்.

கண்ணுக்கு அணிகலம்—கருணை
வாக்குக்கு அணிகலம்—உண்மை
மனத்திற்கு அணிகலம்—அஹிம்சை
கரங்கட்கு அணிகலம்—தானதருமம்

தருமம் என்பது வறியவர்க்கு வழங்குவது, தானம் என்பது, தன்னினும் உயர்ந்தோர்க்குத் தரும் காணிக்கை.

இந்தத் தானம் தருமத்தினும் சிறந்தது. கை படைத்த ஒவ்வொருவரும் கைகளால், முடிந்த மட்டும் தானதர்மம் புரிதல் வேண்டும்.

தானங்களில் பல வகையுண்டு; கோதானம்; பூ தானம்; கிரக தானம்; கன்னிகா தானம்; இப்படிப் பல் வேறு தானங்கள் உண்டு.

இந்தத் தானங்கள் எல்லாவற்றிலும் சிறந்த தானம் ஒன்று உண்டு. அது எது தெரியுமா?

எல்லா தானத்திலும் சிறந்தது அன்னதானம்.

ஏன்?

தொழு நோய், க்ஷயநோய், சுரநோய், ஆஸ்துமா நோய் முதலிய பல கொடிய நோய்களுடன் பல காலம் போராடி வாழலாம். பசி நோயுடன் சில மணி நேரம் கூடப் போராடி வாழ முடியாது.

பசி வந்தால் பத்தும் பறந்து போம் என்பார் ஞானத்தாய் ஔவையார். பசி வந்தவுடன், நாடி நரம்பு தளர்கின்றன; கண் பஞ்சடைகின்றது; காது செவிடு படுகின்றது; உணர்வு குன்றுகின்றது; உணவு உண்டால்தான் உணர்வு பிறக்கின்றது. ஆதலால் 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்று **மணிமேகலை** கூறுகின்றது.

பசித்து, களைத்து, வாடிய ஒருவனுக்கு உணவு தந்தால் அவன் நாடி குளிர்கின்றது; நரம்பு குளிர் கின்றது; ஊன் குளிர்கின்றது; உள்ளம் குளிர்கின்றது; உணர்வு குளிர்கின்றது; உயிர் குளிர்கின்றது; உயிர்க்கு உயிரான சிவங் குளிர்கின்றது.

ஆதலால் தானத்திற் சிறந்தது **அன்னதானம்.**

இத்தகைய மேலான அன்னதானத்தைவிட ஆயிரம் மடங்கு சிறந்த தானம் உளது. அது எது? **அறிவுத்தானம்.**

உயர்ந்த அளவில் 5 ரூபாய் பெறுமதியான உணவை ஒருவனுக்குத் தந்தோமாயினும், அவ்வுணவு ஐந்து மணி நேரந்தானே வயிற்றில் நிற்கும். மறுபடியும் அவனுக்குப் பசியெடாமல் இருக்குமா?

ஆதலால் அன்னதானத்திலும் உயர்ந்தது அறிவுத் தானம்.

ஒரு ஏழை மகனைப் படிக்க வைத்தால் அவன் ஆயுள் முழுவதும் பட்டினியின்றி மகிழ்ந்து வாழ்வான்; அவன் மட்டுமா?

அவன் குடும்பமே வாழும். அவன் பலரை வாழ வைப்பான். எனவே மிகவுயர்ந்த தானம் அறிவுத்தானம்.

இனி, இந்த அறிவுத் தானத்தைவிட ஒரு லட்சம் மடங்கு உயர்ந்த தானம் ஒன்று உளது? ஆம்! அறிவு தானத்தைவிடச் சிறந்ததா? அது யாது? **நிதானம்.**

நிரம்பப் படித்து அறிவு பெற்ற ஒருவன் நிதான மின்றி படபட என்று பேசுவானாயின், அவனை உலகம் பழிக்கும்.

எனவே, அறிவுத் தானத்தை காட்டிலும் நிதானம் மிகவும் உயர்ந்தது.

இந்த நிதானத்தைவிட மிக மிக உயர்ந்த தானம் ஒன்று உளது. எது தெரியுமா? அதுதான் **சமாதானம்**.

நாட்டில் சமாதானம் இல்லையானால் மக்கள் நிலை குலைவார்கள்.

சமாதான வாழ்வே சாலச் சிறந்தது. மதச் சண்டை; சமயச் சண்டை; சாதிச் சண்டை; மொழிச் சண்டை; கட்சிச் சண்டை இப்படி எத்தனை எத்தனை சண்டைகள் நாட்டைச் சீரழிக்கின்றன. சண்டையிட்டு உடைகின்றது மண்டை. மனிதர்களுக்குள் சமாதானம்; சமயம், சாதி, மொழி அனைத்திலும் சமாதானம் வேண்டும். அண்ணாவுக்கும் தம்பிக்கும் சமாதானம் கணவனுக்கும் மனைவிக்கும் சமாதானம்.

இந்த சமாதானத்துக்கென்றே வாழ்ந்தவர் **காந்தி யடிகள்.**

சமாதானத்துடன் வாழுகின்ற ஒருவர் சந்நிதானத்தை அடைவார்.

காந்தியடிகள் பேச்சில் சமாதானம்; எழுத்தில் சமாதானம்; வாழ்வில் சமாதானம்.

இத்தகைய சமாதான நன்னெறியை உலகமெல்லாம் கடைப் பிடிக்க வேண்டும் என்று வாழ்ந்தவர் மகாத்மா. தருமர் கூறுகின்றார்.

> குரவரையுங் கிளைஞரையுங்—குலத்துரிய
> துணைவரையுங் கொன்று போர் வென்று
> அரவநெடுங் கடலாடை யவனியெலாம்
> தனியாளும் அரசு தன்னில்
> கரவுரையு மனத்தாதை எமக்குரைத்த
> மொழிப்படியே கானந் தோறும்
> இரவுபகல் பலவேறு சாகநுகர்ந்
> துயிர் வாழ்தல் இனிது நன்றே.

என்று, அறம் என்ற தேன், சொட்டச் சொட்டச் சொல்கின்றார்.

ஆ! ஆ! என்ன அறம்.

அறத்திலே சிறந்தவர் தருமர். தருமரிடத்தில் அறம் குடியிருந்தது. அரிச்சந்திரனிடத்திலே சத்தியம் குடியிருந்தது. ஏசுநாதரிடத்திலே அகிம்சை குடியிருந்தது.

பிரகலாதரிடத்தில் உறுதி குடியிருந்தது.

இந்த அறம், சத்தியம், அகிம்சை, உறுதி என்ற

குணங்கள் அத்தனையும் குடியிருந்தன, அண்ணல் காந்தியடிகளாரிடம்.

அத்தகைய மகாத்மாஜி, தன்னை ஒருவன் சுட்ட போதும், "ஹரே ராம்" என்று கூறி மலர்ந்த முகத்துடன், சமாதானத்துடன் பரமன் பதமலர் சேர்ந்தார்.

இத்தகைய சமாதானத் தூதர் தன் சத்தியம் நிறைந்த மலர் வாக்கினால் **'என் அரசியல் வாரிசு நேரு'** என்று உரைத்தருளினார்.

நேருஜி அவர்களும், ஆயுள் முடியும்வரை, கரும வீரனாக, தியாக ஜோதியாக, தேன் வண்டினைப் போல், சலியாமல் தேசத்துக்காக உழைத்துச் சாந்தி பெற்றார்.

அவர் திருமேனி மறைந்தது. அவருடைய தியாகம் எங்கும் நிறைந்தது.

உண்மையான தியாகச் சீலர் ஒருவர் வாழ்ந்தார். அவர் உத்தமமான உள்ளம் உடையவர். தனமும் மனமும் படைத்தவர்.

அவருடைய திருமாளிகையிலே ஒரு நாள் இரவு கள்ளன் ஒருவன் நுழைந்து இரும்பு பெட்டியைத் திறந்து விலைமதிக்க வொண்ணாத வயிர 'நெக்லசைக் களவு செய்து சென்றான்.

தியாகசீலர் பொழுது விடிந்து பார்த்தார். இரும்புப் பெட்டித் திறந்திருந்தது. வைர நெக்லஸ் காணவில்லை. அதன் வெல்வட்டுப் பெட்டி மட்டும் இருந்தது.

அவர் மனம் வருந்தியது. எதற்காக? வைர நெக்லஸ் போனதற்காக அன்று; எடுத்தவன் பெட்டியை வைத்து

விட்டுச் சென்ருனே? என்றுதான் வருந்தியது. ஆராய்ந்தார். கள்ளனுடைய கைக்குட்டை அங்கு பெட்டியின் அருகில் கிடந்தது. அதை எடுத்து நெடுநேரம் சிந்தித்தார்.

உடனே ஒரு பெரிய யோசனை தோன்றிற்று. துள்ளினுர், மகிழ்ந்தார். நேரே வண்ணுன் வீட்டுக்குச் சென்ருர். அப்பா இந்தக் கைக்குட்டையில் உள்ள குறி யாருடையது என்று கேட்டார். வண்ணுன் கருப்புமையால் அடையாளக் குறியிடுவது இயல்பு.

அவன் இது இன்னுருடைய குறி என்ருன்.

தியாகசீலர் உள்ளம் உவந்து அந்தக் கைத்துண்டையும் நெக்லஸ் வைக்கும் வெல்வெட்டுப் பெட்டியையும் உடன் எடுத்துக் கொண்டு, யாரும் இல்லாத தனிமையில் அக்கள்ளனேச் சந்தித்து, "அன்பனே! நீ அஞ்சாதே! என் வீட்டுக்கு வந்து வைர நெக்லஸ் களவு செய்தாயல்லவா? அப்போது இப் பெட்டியையும் கைக்குட்டையையும் விட்டு விட்டனே. இவற்றைக் கொணர்ந்துளேன்! பெற்றுக்கொள்" என்று அன்புடன் வழங்கினுர்.

அவருடைய கருணைத் திறத்தைக் கண்ட கள்ளன் அன்று முதல் களவுத் தொழிலைத் துறந்து அவரை வணங்கித் திருந்தினுன்.

இவ்வாறு கள்ளனுக்குக் கருணை காட்டுகின்ற கருணையுடையவர்கள் வாழ்கின்ற நாடு பாரத நாடு.

ஆதலால் வாழ்க பாரதம்.

வாழ்க அறநெறி.

வாழ்க சமாதானம்!

சத்தியம்

அணிகலனை யாரும் விரும்புவார்கள். ஆனால், இப்போது நல்ல தங்கத்தில் அணிகலன் தயாரிக்க முடியாது. தயாரித்தாலும் அதற்குக் கள்ளர் முதலியவர்களால் ஆபத்து உண்டு.

ஆபத்தில்லாத சில அணிகலன்கள் உண்டு.

கண்ணுக்கு அணிகலன்—கண்ணோட்டம்.
காதுக்கு அணிகலன் — நல்ல கேள்வி.
கைக்கு அணிகலன்—தான தர்மம்.
மனதுக்கு அணிகலன்—தூய சிந்தனை.
வாக்குக்கு அணிகலன்—சத்தியம்.
சத்தியமே நித்தியம்; மற்றவெல்லாம் அநித்தியம்.

"பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று"—என்பார் திருவள்ளுவர்.

சத்தியத்துக்காக ஒரு மன்னன் மனைவியை விற்றான்; மகனை விற்றான்! தன்னையும் விற்றுவிட்டான். மாநிலங் காத்த அம்மன்னர் மன்னன் 12 ஆண்டுகள் மயானங் காத்தான்; பட்டு பீதாம்பரம் உடுத்த இடையில் பிணத்தின் மேல் இட்ட சல்லாத் துணியை உடுத்தான். தெள்ளமுதம் அருந்திய வாயில் வாக்கரிசியைப் பொறுக்கி யுண்டான்; ஓமப்புகைபட்ட திருமேனி ஈமப் புகைபட்டுக் கருத்தது. செங்கோல் பிடித்த திருக்கரத்தில் பிணக்கோல் பிடித்தான். சிங்காதனத்திலிருந்தவன் எலும்புக் குவியலின் மீது இருந்தான்; என்னே உறுதி?

பொய் சொல்லக் கூடாது என்ற ஒரு கொள்கைக் காகத்தான் இத்தனை துன்பங்கள் நேர்ந்தன.

அடிமையான சந்திரமதி பஞ்சுபடாத பாடுபட்டாள். அரவந் தீண்டி மாண்ட மைந்தனை மயானத்தில் சிதை அடுக்கிக் கொளுத்த முயன்றாள்.

நள்ளிரவு; மனைவியென்றறியாத மன்னன் சிதையை உதைத்தான். "ஆரடி கள்ளி! இங்கு ஒரு பிணத்தைச் சுடுவதாயின் காற்பணமும் முழந்துண்டும் பிடியரிசியும் தரவேணும். அவை என் எஜமானுக்கு உரியவை," என்றான்.

கணவன் என்றறியாத அம்மாதரசி "அண்ணா! அண்ணா! உதைக்காதே; உலகாளப் பிறந்த உத்தம சிலன். கடவுள் சாட்சியாக என்பால் ஒரு சல்லியும் இல்லை" என்றாள்.

"என்டி! பொய் புகல்கின்றாய். கழுத்தில் மின்னும் தாலியை விற்றுக் கொடு" என்றான்.

"அந்தோ! இத்திருமாங்கல்யம் அயோத்தியை யாளுகின்ற அரசர் பெருமானையன்றி மற்றுயார்க்குந் தெரியாத தெய்விகமுடையதாயிற்றே; இச்சுடலை காக்கும் புலையன் கண்டானே" என்று அழுதாள் அம்மங்கை.

இதைக்கேட்ட அரிச்சந்திரன் சந்திரமதியோ என்று ஐயுற்றான். எரிகின்ற பிணத்தை அதிகமாக எரிய வைத்து உற்றுப் பார்த்தான்!

"சந்திரமதி! மாண்டது நமது தவக்குமாரனா?" என்று கூறி அலறியழுதான்.

கணவன் என்றறிந்த அக்கற்புக்கரசி அவன் கால் மீது விழுந்து கண்கலுழ்ந்தாள்.

அப்போது வந்தார் விச்வாமித்திரர்.

"அரிச்சந்திரா! ஒரு பொய் சொல். மனைவியை மீட்டுத் தருவேன். மகனை எழுப்பித் தருவேன். நாட்டையும் நகரையும் பொன்னையும் மணியையும் பொருளையும் பட்டம் பதவியையுந் தருவேன்" என்றார்.

வேந்தன் அவரைக் கண்டு நகைத்தான். "தவ முனிவரே! அவமொழி பகர மாட்டேன். நீர் இவ்வாறு கூறலாமோ?

உடைந்த பானை வறுக்கும் ஏனமாகப் பயன் படும்; உடைந்த கண்ணாடி கள்ளனைக் காக்க பின்பக்கஞ் சுவர் மீது வைக்க ஆகும். இறந்த மாட்டின் தோல் நீர் இறைக்கும் கபலைக்கு ஆகும்; அதன் கொம்பு தலைசீவ சீப்புக்கு ஆகும்; இறந்த உடும்பின் தோல் கஞ்சிராவுக்கு ஆகும்; ஆட்டின் தோல் கை பையாக உதவும். கிழிந்த ஆடைவிளக்குத் துடைக்க ஆகும்; உடைந்த மரச்சாமான் அடுப்பெரிக்க ஆகும். இறந்த மனிதனுடைய உடம்பு எதற்கு ஆகும்? ஒன்றுக்கும் ஆகாது. குழம்பில் அகப்பையிட்டால் கெடாமல் இருக்கும். மனிதன் கை வைத்தால் ஊசிப் போகும். கைபட்டால் ஊறுகாய் புழுக்கும்; கைபட்டால் பாயசம் நீற்றுப் போகும். அகப்பைக்கு இருக்குந் தகுதி கூட மனிதன் கைக்குக் கிடையாது. நாறுகின்ற உடம்பு இது. உயிர் போனால் புலையனும் விரும்பான். இந்த உடம்பைப் பேணும் பொருட்டு உயிரினும் உயர்ந்த சத்தியத்தை நான் விடுவேனா? ஒருபோதும் விடேன்; விடேன் சந்திரன் வெதும்பினாலும் வெதும்புவான்; சூரியன் பனிக்கட்டி

போல் குளிர்ந்தாலும் குளிர்வான்; கடல் திடலாகும். இந்த அரிச்சந்திரனுடைய நா பிறழாது.

புலையனும் விரும்பாத இப்புன்புலால் யாக்கை
நிலையெனு மருண்டு உயிரினும் நெடிதுறச் சிறந்தே
தலைமை சேர்தரும் சத்தியம் பிறழ்வது தரியேன்.
கலையுணர்ந்த நீ எமக்கிது கழறுவதழகோ.

பதியிழந்தனம் ; பாலனை யிழந்தனம்; பெற்ற
நிதியிழந்தனம். இனி எமக்குண்டென நினைக்குங்
கதியிழக்கினும் கட்டுரையிழக்கிலன் என்றான்.
மதியிழந்தனன்: வாயிழந் தருந்தவன் மறைந்தான்.

அரிச்சந்திரனுடைய உறுதியை யறிந்த விச்வாமித்திரர் மதியும் வாயும் இழந்து மறைந்தார்.

குழந்தையை இவள் கொன்றாள் என்று ஒரு குற்றம் சாட்டி மன்னன் ஆணையால் இவளைக் கொல் என்று ஒரு உத்தரவு வந்தது.

அரிச்சந்திரன் "பெண்மணி! நீ வழக்கமாக வணங்குங் கடவுளை வணங்கிக் கொண்டு கிழக்கு நோக்கி நில்; உன்னை இவ்வாளால் வெட்டிவிட்டு, நீ சென்ற உலகிற்கு யானும் வருவேன். இருவரும் அந்த உலகிலாவது நம் மைந்தனைச் சந்திப்போம்; திருவருளைச் சிந்திப்போம்," என்றான்.

அம்மாதரசி, "நான் வழக்கமாக வணங்கும் தெய்வம் தாங்கள் தானே. உம்மை யன்றி வேறு தெய்வத்தைக் கனவிலுங் கருதியறியேன்" என்று வாள் தாங்கி நின்ற மன்னவனை வணங்கி நின்றாள்.

வழக்கமாக நீ வழிபடு தெய்வத்தை வணங்கி
கிழக்கு நோக்கி நீ இருவென; கிளி மொழி மடந்தை
பழக்கமான அக்கணவனைப் பரவி என்றுவி
இழக்கற் கஞ்சி நீ அறம் வழுவேல் என இயம்பும்.

அரிச்சந்திரன், தன்னையே தேற்றி உறுதியுடன் நின்ற உத்தமியின் கற்பின் திறத்தைக் கண்டு அதிசயித்தான். வாளை எடுத்தான்; கீழ்வருமாறு கூறுகின்றான்.

"அகில உலகங்கட்கும் உயிர்கட்கும் தனிப்பெருந் தலைவன் சிவபெருமான் என்பதும், எண்ணிலாத புகழுடைய அப்பரமபதியின் திருவாக்கு வேதம் என்பதும், அவ்வேதத்தில் கூறிய அறம் பலவற்றுள்ளும் சத்தியம் சமானமில்லாத அறம் என்பதும், அந்தச் சத்தியத்தை அடியேன் விரதமாகக் கொண்டதும், சத்தியநெறி நின்று என்னை இவள் அனுசரித்ததும் உண்மையாயின் இவ்வாளினால் இவளுக்கு மரணம் எய்தாது. இல்லையேல் மரணம் அடைக" என்று கூறி வாளை வீசினான். அவ்வாள் அறுபதாண்டு நிறைவிழாவில் இடுகின்ற மணமாலையாக விழுந்தது.

உலகுயிர்க்கெலாம் பசுபதி ஒரு முதல் ஆயின்:
அலகில் சீருடையவன் மொழி மறையெனின்: அதன் கண்
இலகறம் பலவற்றினும் வாய்மை ஈடிலதேல்
விலகுறாமல் அவ்வாய்மையை விரதமாக் கொளின் யான்.

நெறியில் அன்ன என்றனைவிடா நிறை இவட்குளதேல்
இறுதியின்மையைப் பெறுக: இல்லெனின் இவள் இறுதி
பெறுக என்று வாள் வீசினான்: பேதை தன் கழுத்தில்
மறுமணத்திடும் மாலையாய் வீழ்ந்ததவ் வடிவாள்,

உடனே, சிவபெருமான், உமாதேவியார் திருமால், திருமகள், பிரமதேவர், கலைமகள், முப்பத்து முக்கோடி தேவர்கள், சித்தர்கள், கணங்கள் எல்லோரும் தோன்றினார்கள். உலகெலாம் அந்த சத்தியமன்னனை வாழ்த்தின.